# செம்பதாகை

மலர்: 5
இதழ்: 10
1983 ஐப்பசி
விலை ரூபா 1-50
புரட்சிகர வெகுஜன ஏடு


# வரவு செலவுத் திட்டப் பாதிப்பு மக்களின் மீதே சுமத்தப்படும்!!

அடுத்த ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டை நிதி அமைச்சர் அறிவித்துள்ளார். மொத்தச் செலவு 5121 கோடி ரூபாவாகும். வருமானம் 2805 கோடி 4 லட்சமாகும். பற்றுக்குறையாகத் துண்டுவிழும் தொகை 2315 கோடி 96 லட்சமாகும். இத்தொகைக்கு ஈடுசெய்யும் சுமையை பல்வேறு வழிகளிலும் நம் நாட்டு மக்களின் மீது சுமத்துவதைத் தவிர நிதி அமைச்சருக்கு வேறுவழி எதுவும் கிடையாது.

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியைக் கணக்கிட்டு கொள்வதற்கு அந்த நாட்டின் வருடாந்த வரவு செலவுத் திட்டம் நல்ல உரைகல்லாகும். வருடா வருடம் துண்டு விழும் பற்றுக்குறை அதிகரித்துக் கொண்டே செல்கிறது என்றால் அதன் அர்த்தம் பொருளாதார அபிவிருத்தியானது சரியான வழிகளில் முன்னேறவில்லை என்பதேயாகும். பொருளாதார மேம்பாடு பெறுவதற்கு அபிவிருத்திப் பாதையில் எந்த நாட்டிலும் மக்கள் கஷ்டங்களையும், கட்டுப்பாடுகளையும் தாங்கிக் கொள்ள வேண்டியது தவிர்க்கமுடியாத ஒன்றுதான். ஆனால் அபிவிருத்தியும், பொருளாதார மேம்பாடும் குறிப்பிட்ட ஒரு சிறு பகுதியினருக்குத்தான் ஏற்படுகின்றது. அதற்காகப் பெரும்பான்மையான உழைக்கும் மக்கள் சுமக்கமுடியாத சுமைகளைத் தாங்கிக் கொள்ள வேண்டும் என நிர்ப்பந்திப்பதை யாரும் ஏற்றுக் கொள்ள முடியாது. மிகச் சிறுபான்மையினரான உயர் வர்க்கத்தினர் ஆடம்பரமான, சுகபோக வாழ்வைத் தாராளமாகப் பெறுகின்றனர். அதேவேளை பலலட்சம் உழைப்பாளி மக்கள் ஏழ்மையையும், கஷ்டங்களையும் அனுபவிக்கின்றனர். ஆளும் வர்க்கம் சொத்துடைய, சுகபோகம் அனுபவிக்கும் வர்க்கம் ஆகையால் வருடாவருடம் காட்டப்படும் வரவு செலவுத் திட்டமும் அவர்களுக்கு சாதகமாகவும் சாதாரண மக்களுக்கு பாதகமாகவும் அமைந்து விடுகின்றது.

நிதி அமைச்சர் பற்றுக் குறையாக வரும் பணத்தை இரண்டு வழிகளில் பெற இருக்கிறார். ஒன்று உள்நாட்டில் பெறுவது, அதன் அர்த்தம் மக்களின் மீது வரிச் சுமைகளையும், விலைவாசி உயர்வுகளையும். மானியக் குறைப்புகளையும் சுமத்துவதாகும். இரண்டாவது வெளிநாடுகளில் கடன்களாகவும், உதவிகளாகவும் பெறுவது. இவை பெரும்பாலும் மேற்கத்திய ஏகாதிபத்திய முதலாளித்துவ நாடுகளிடம் மண்டியிட்டுப் பெறுபவையாகவே இருக்கும்.

உலகவங்கி சர்வதேச நாணயசபை ஆகியவற்றிடம் இருந்து பெறப்படும் கடன்களுக்கு கூடிய வட்டி மட்டுமன்றி இறுக்கமான நிபந்தனைகளும் உண்டு. இவ்வாறான நிபந்தனைகளினால் தான் நமது ரூபாயின் மதிப்பு கடந்த ஆறு வருடங்களில் பல தடவைகள் குறைக்கப்பட்டன. இதனால்

## ★ கடுகளவு உதவி மலையளவு சுரண்டல்

## ★ இதுவே நவகாலனித்துவ நடைமுறை

விலைவாசி உயர்வும், பண வீக்கமும் நம்மை அமுக்கி வருகின்றன. மேலும் ஏகாதிபத்திய முதலாளித்துவ நாடுகள் மூன்றும் உலக நாடுகளுக்கான உதவிகளை வழங்கும் போது பல்வேறு உள்நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்கின்றன. உதாரணமாக நமது நாட்டில் தொலைக்காட்சி நிலையத்தை யப்பான் உதவியாகவே கட்டித்தந்தது என்றே இன்றும் கூறப்படுகிறது. அதேவேளை யப்பானின் உற்பத்தி செய்யப்பட்ட பல்வேறு ரகமான தொலைக்காட்சிப் பெட்டிகளும் அவற்றுக்கான உபகரணங்களும் தாராளமாக இலங்கையில் விற்பனைக்கு விடப்பட்டுள்ளதையும் அதன் மூலம் வருடா வருடம் நமது நாட்டுப் பணம் கோடி கோடியாக யப்பான் சென்றடைவதையும் யாரும் ஞாபகப்படுத்துவதில்லை. கடுகளவு உதவியும் மலையளவு சுரண்டலும் என்பதே முதலாளித்துவ நாடுகளின் உதவியாகும். இத்தகைய உதவிகளைக் கொண்டு நமது நாடு போன்ற நாடுகள் ஒருபோதும் முன்னேற முடியாது.

வரவு செலவுத் திட்ட மதிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்பே நிதி அமைச்சர், எதிர்வரும் வரவு செலவுத் திட்டம் கடுமையானதாகவே இருக்கும் என்று கூறி விட்டார். அதற்கு காரணத்தைக் கூறும் போது கடந்த யூலை

(8ம் பக்கம் பார்க்க)

# தமிழர் கூட்டணித் தலைவர்கள் வெளி நாடுகளில் என்ன செய்கிறார்கள்?

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர்கள் தற்போது குடும்பம் குடும்பமாக வெளிநாடுகளிலேயே இருக்கின்றார்கள். பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டது போல் ஓரிரு கூட்டணித் தலைவர்களின் கொழும்பு வீடுகளும் உடமைகளும் சேதமடைந்தது உண்மையே: ஆனால் அவர்களது யாழ்ப்பாண வீடுகளும், சொத்துகளும் சுகமாகவே உள்ளன. மேலும் எந்தக் கூட்டணித் தலைவரையும் அரசாங்கம் கைது செய்யவோ அன்றி தேடப்படுபவர்களாகவோ கொள்ளவில்லை. பெரும் விளம்பரம் கொடுக்கப்பட்ட ஒரு கடிதம் சம்பந்தமாகக் கைது செய்யப்பட்டவர்கள் கூட விடுதலை செய்யப்பட்டு விட்டனர். இந்நிலையில் கூட்டணித் தலைவர்கள் ஏன் வெளிநாடுகளில் இருக்க வேண்டும் என்றே தமிழ் மக்கள் கேட்கின்றார்கள்.

கடந்த காலத்தில் தமிழ் மக்களுக்காக ஏகபோகஉரிமை கொண்டாடியவர்கள் தமிழர் கூட்டணியினர். தேர்தலின் கிடைத்த ஆதரவை வைத்து வாயில் வந்ததை எல்லாம் பேசி அவையே தமிழ் மக்களின் விமோசனத்திற்கான பாதை எனக் கூறி வந்த இவர்கள் இன்று என்னசெய்கிறார்கள். உலகில் எந்த நாட்டிலும் சரி உரிமைப் போராட்டமோ அன்றி விடுதலைப் போராட்டமோ தத்தமது சொந்த நாடுகளிலே மக்களுடன் இருந்து அந்த மக்களின் ஆதரவோடுதான் முன்னெடுக்கப்படுகின்றன. ஆனால் விடுதலை பேசிய கூட்டணித் தலைவர்கள் இந்தியாவிலும், லண்டனிலும் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள். பத்திரிகைகளுக்குப் பேட்டிகள், பிள்ளைகளுக்கு திருமணங்கள், பிள்ளைகளின் மேற்படிப்புகளுக்கான

(8ம் பக்கம் பார்க்க)

# பேரினவாத - அந்நிய சக்திகளுக்காக பிரச்சினையின் தீர்வை பலியிடவேண்டாம்!

## இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) வேண்டுகோள்!

இன்றைய நெருக்கடியான நிலையில் இருந்து நாட்டை மீட்பதற்கு ஒரேவழி தமிழர் பிரச்சினைக்கு நியாயமான ஒரு தீர்வைக் காண்பதேயாகும். இதற்கான தனது பொறுப்பை வெறும் கண்துடைப்பு நடவடிக்கையால் அரசாங்கம் தட்டிக்கழித்து விடாது தமிழர் விடுதலைக் கூட்டணி உட்பட சகல கட்சிகளையும் கொண்ட ஒரு சர்வ கட்சி மாநாட்டை முன் நிபந்தனைகள் எதுவும் அற்றரீதியில் நடாத்துவதற்கு முன்வரல் வேண்டும். கடந்த காலத்தில் ஏனைய கட்சிகளை அழைக்காது தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் மட்டும் அரசு பேச்சு வார்த்தைகளை நடாத்தி வந்தது. ஆனால் இன்று தமிழர் கூட்டணியை அழைக்காது அதற்கு முன் நிபந்தனை விதித்து விட்டு ஏனைய கட்சிகளை அழைத்து தனது முடிவுகளை திணிக்க முயலுகின்றது. அரசின் இத்தகைய போக்கு நிலைமைகளை மேலும் சிக்கலாக்கி பிரச்சினைகளை மோசமடையவே செய்யும் என்பதை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) சுட்டிக் காட்டுகின்றது.

இவ்வாறு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் (இடது) தேசிய அமைப்புக் கமிட்டியின் சார்பாக அதன் செயலாளர் தோழர் கே ஏ.சுப்பிரமணியம் பத்திரிகைகளுக்கு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவ் அறிக்கை குறிப்பிடுவதாவது, இன்றைய நிலையில் மேலும் பிரச்சினைகளைச் சிக்கலாக்கி நிலைமைகளை மோசமடையச் செய்யும் நோக்குடன் பேரினவாத சக்

(8ம் பக்கம் பார்க்க)

## அறிவித்தல்

பத்திரிகைத்தாளின் விலை உயர்வும், அச்சகக் கூலியின் அதிகரிப்பும் செம்பதாகையின் விலையை ஐம்பது சதத்தால் அதிகரிக்க நிர்ப்பந்தித்துள்ளதை வாசகர்களுக்கு அறியத் தருகின்றோம்.

-நிர்வாகி

# சிங்கப்பூர் உதாரணம் முடிந்து, தென் கொரியா பின்பற்றப்படுகிறது!

பதவிக்கு வந்த ஆரம்ப காலங்களில் ஜே. ஆர். ஜயவர்த்தனவின் பிரதானமான கோஷம் இலங்கையை மற்றொரு சிங்கப்பூராக்குவது என்பதாகும். சிங்கப்பூரின் பொருளாதார, அரசியல், ஏனைய அமைப்பு முறைகளை இலங்கையில் புகுத்தி அதன் மூலம் அவர் நினைத்த 'சுபீட்சத்தை' கொண்டு வரமுயன்றதாகும். சுதந்திர வர்த்தக வலயம், கட்டுப்பாடற்ற இறக்குமதி, அந்நிய ஏகபோகக் கம்பனிகள்-வங்கிகள் என்பனவற்றின் வருகை, மேற்கத்திய கலாச்சாரப் பாணியின் அழுக்கம், விடுதிகள், விபச்சாரங்கள் போன்ற சீரழிவுகள் சிங்கப்பூர் பாணியில் இங்கு வரவழைக்கப்பட்டது உண்மையே. ஆனால் இவை முழுமையான சிங்கப்பூரைக் கொண்டு வரவில்லை. அதற்கு நமது நாட்டு மக்களிடையே ஆதரவும் இல்லை. அதே போல் அரசியல் நிர்வாக அமைப்பு முறைகளில் சிங்கப்பூரைப் பின்பற்ற முயன்ற யூ. என். பிக்கும்— ஜே. ஆருக்கும் சிங்கப்பூர் அரசியல் மாதிரியான எல்லைகளுக்குள் நிற்பது முடியாது போய்விட்டது. அந்த எல்லைகளையும் மீறி அரசியல் அமைப்பு முறைகளில் கடும் கொள்கைகளை தமது வர்க்கவசதிக்கு ஏற்ப அமைத்துக் கொள்ள வேண்டிய நிலைக்குச் சென்றுள்ளனர். அதனால் அவர்கள் சிங்கப்பூருக்குப் பதிலாகத் தற்போது தென்கொரியாவைத் தேர்ந்தெடுத்துள்ளனர். இப்பொழுது முன்னுதாரணங்கள் யாவும் தென்கொரியாவில் இருந்து பெறப்படுகிறது.

தென்கொரிய முதலீடுகள் செங்கம்பள வரவேற்பைப் பெறுகின்றன. தனிக்கட்சி—தனிநபர் சர்வாதிகாரம் ஏற்கனவே பிரதி பண்ணப்பட்டுவிட்டது. அரசியல் அடக்குமுறைச் சட்டங்கள் அந்தப் பாணியில் பரீட்சிக்கப் பட்டு வருகின்றன. அமெரிக்காவின் வழிகாட்டல்களும் ஆலோசனைகளும் அவ்வாறே. அமெரிக்கத் துருப்புக்கள் தென்கொரியாவில் நிலை கொண்டுள்ள முறையும் விரைவில் பிரதி பண்ணப் படலாம் போல் தெரிகிறது. இவ்வாறான நிலையிலேயே தென் கொரியாவைப் போற்றிப் புகழ்ந்து அந்நாட்டின் 'உயர்வை' ஜே. ஆரும்—யூ. என் பியும் மக்களை நம்பும்படி கேட்கின்றனர்.

இன்று தென் கொரியா ஒரு அமெரிக்க அடிவருடி நாடாகவே இருந்து வருகின்றது. அமெரிக்கா எதை நினைக்கின்றதோ, விரும்புகின்றதோ ஆணையிடுகின்றதோ அதை அடிமைத் தனமாகச் செயல்படுத்தும் நாடாகவே தென் கொரியா செயல்பட்டு வருகிறது. அமெரிக்காவினதும், தென்கொரிய ஆளும் கும்பலினதும் நலன்களுக்காக தென்கொரிய மக்கள் பிழிந்தெடுக்கப்படுகின்றனர். நீதி நியாயம் நாட்டின் இறைமை-இரு கொரியாவும் இணைதல் போன்ற கோரிக்கைகளை முன்வைத்த தேசபக்தர்கள், ஜனநாயகவாதிகள், தொழிலாளர்கள், மாணவர்கள், நாட்டு நலன் விரும்பிகள் யாவரும் லட்சக்கணக்கில் அடக்கு முறைகளுக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர். பல்லாயிரம் பேர் சிறைகளில் அடைக்கப்பட்டு சித்திரவதைகளுக்கு ஆளாக்கப் பட்டு வருகின்றனர்.

இத்தனைக்கும் அந்நாட்டின் சர்வாதிகார ராணுவ ஆட்சிக்கு அமெரிக்கா முண்டு கொடுத்து வருகிறது. சகல விதமான நவீன யுத்த தளபாடங்களுடன் கூடிய 38,000 அமெரிக்க துருப்புகள் இன்று தென் கொரியாவில் நிலை கொண்டுள்ளன. இத்தகைய ஒரு தென் கொரியாவையே நமது நாட்டிற்கு முன்னுதாரணம் காட்டுகிறார்கள் ஆட்சியாளர்கள். இது நமது நாட்டுக்கும் மக்களுக்கும் அவசியமான ஒரு முன்னுதாரணமா?

இன்றைய ஆளும் வர்க்கம் இலங்கையை சிங்கப்பூராக, தென் கொரியாவாக அல்லது பிலிப்பைன்ஸாகவோ மாற்றவே முயன்று வருகின்றது என்பது பட்டவர்த்தனமே. ஆனால் இலங்கை மக்கள் இவர்களின் சூழ்ச்சி மிக்க எண்ணங்களுக்கு ஒரு போதும் இடம் கொடுக்கக் கூடாது. அத்தகைய முயற்சிகளுக்கு எதிராக எந்நேரமும் விழிப்புடன் இருந்து செயல்பட வேண்டும். ★

## நம்நாட்டு ஜனாதிபதியின் வர்க்க பாசம்

இம் மாதம் ஒன்பதாம் திகதி தென்கொரிய ஜனாதிபதி சுன்டூஹுவான் தலைமையில் சென்ற தூது கோஷ்டியினருக்கு பர்மாவில் வெடிகுண்டு வைக்கப்பட்டது. இதில் நான்கு தென்கொரிய அமைச்சர்கள், உயர் அதிகாரிகள் உட்பட பதினாறுபேர் கொல்லப்பட்டனர். சர்வாதிகாரி சுன்டூஹுவான் மயிரிழையில் உயிர் தப்பினான். இச்செய்தி கேட்டு நமது தார்மீக ஜனாதிபதி பதைபதைத்துப் போய் ''இது பயங்கரவாதத்தின் கோழைத் தனமான செயல்'' என்று கண்டித்தார் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதற்காகப் பிரதி வெளிவிவகார அமைச்சரையும் தென் கொரியாவிற்கு அனுப்பி வைத்தார். ஆனால் இதே மனிதருக்கு தனது சொந்த நாட்டில் இடம் பெற்ற மிருகத்தனமான, கோழைத்தனமான, கேவலமான சம்பவங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்காக ஒரு சிறு அனுதாபம் கூடத் தெரிவிக்க முடியாது போய்விட்டது. எதற்கும் வர்க்க சார்பும் நிலைப்பாடும் இருக்கவே செய்யும். பெரு முதலாளித்துவ— பேரின வாதத்திற்கு அதன் நிலைப்பாடு தேவைதானே.

# வடபகுதியின் நிலப்பிரச்சினை நிலமற்றமக்களைவிரட்டுகிறது

வட பகுதியில் குறிப்பாகக் குடாநாட்டிற்குள் நிலப் பிரச்சினை பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது, வெளிநாட்டுச் சம்பாத்தியத்தினால் ஏற்பட்டுள்ள ஓரளவு பணப் புளக்கத்தினாலும், யூலையில் இடம்பெற்ற இனவாத வன்செயல்களாலும் ஏற்பட்டுள்ள புதிய சூழ்நிலையில் நிலப்பிரச்சினை முன்னரை விடப் புதிய கட்டத்தினுள் புகுந்துள்ளது. இதனால் நிலமற்ற குத்தகைக் குடியிருப்பாளர்களும், விவசாயிகளுமான சாதாரண உழைக்கும் மக்கள் தமது நிலங்களை இழக்கும் அபாயத்திற்கு உள்ளாகி உள்ளனர்.

வடபகுதியில் நிலப்பிரச்சினை சாதி அமைப்பு முறையோடு பின்னிப் பிணைந்த ஒன்றாகும். பெருநிலச் சொந்தக்காரர்கள் தற்போது தமது நிலங்களை கூடிய விலைக்கு விற்று அப்பணத்தை வட்டிக்காக வங்கியில் இட்டும் வருகின்றனர். அவ்வாறு தமது நிலங்களை கூடியவிலைக்கு விற்கும் போது அந்த நிலங்களின் ஏலவே குடியிருந்த மக்களைப் பற்றி எவ்வித அக்கறையும் கொள்வதில்லை. நூறு வருடங்களுக்கு மேல் தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வந்த மக்களை சிறிதளவாகிலும் மனச்சாட்சி இன்றி எழுப்பித் துரத்தி விட்டு பெரு விலைக்கு அந்த நிலங்களை விற்று வருகின்றனர். விற்பவன் நிலவுடைமையாளன். வாங்குபவன் பணவுடைமையாளன். பாதிப்புக்குள்ளாகுவது நிலமற்ற ஏழைமக்கள்தான். அவர்களும் தமிழர்களே. அவர்களில் பெரும் பகுதியினர் தாழ்த்தப்பட்ட மக்களே. நிலவுடமை பணவுடமை இவற்றுடன் கூடவே சாதி அகம்பாவமும் — வெறியும் கலந்து விடுகின்றது. முன்னைய காலங்கள் போல் தத்தமது எண்ணப்படி வீடுகளைப் பிடுங்கி அவர்களைக் கலைக்க முடியாது என்பதை உணர்ந்த இந்த உடமை வர்க்கத்தினர் சட்டத்தைநாடி அதன் துணையுடன் தமது துரத்தல் வேலைகளைச் செய்து வருகின்றனர். சட்டம் உடமையாளர்களுக்குத் தானே உதவி செய்யும். சட்டத்தைப் பாதுகாக்கும் காவல் துறையினரும் உடமை வர்க்கத்தின் காவலர்கள் தானே. அதிலும் தமிழ்க் காவலர்கள் சாதி கண்ணோட்டத்தில் பணிபுரிந்தால் சாதாரண தாழ்த்தப்பட்ட தமிழ் மக்களின் கதி கூறவே தேவையில்லை.

அண்மைக் காலங்களில் குடாநாட்டின் பல பகுதிகளில் நிலவுடமையாளர் பலர் நிலத்தை பணவுடமையாளர்களுக்கு பணத்துக்காக விற்று வருவதால் பலநூறுதாழ்த்தப்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டு அகதிகளாக்கப் பட்டுள்ளனர். ஆனால் இவர்களை அகதிகள் என்று யாருமே கூறுவதில்லை. அவர்களுக்கு நடைபெறும் அநீதிகள் பற்றி எந்தத் தமிழர் தலைவர்களும் அல்லது அமைப்புகளும் அக்கறைப் படுத்துவதில்லை. பணம்உள்ளவன் நிலத்தை வாங்கினால் அவனுடையதுதானே நிலம். அதற்குள் மற்றவர்களுக்கு என்ன வேலை? என்ற உடமை வர்க்க நியாயம் பேசும் தலைவர்களும் அமைப்புகளுமே தமிழர் நலன் காக்கும் அமைப்புகளாக இருக்கின்றன.

ஒரு புறத்திலே பேரினவாத அரசு தமிழ் மக்களை இனரீதியில் இம்சைப்படுத்தி வருகிறது. மறுபுறத்திலே நிலவுடைமையாளர்களும் — பணவுடைமையாளர்களுமான ''உயர் சாதித்'' தமிழர்கள் நிலமற்ற ஏழைத் தாழ்த்தப்பட்ட மக்களை நிலத்தில் இருந்து துரத்தியடித்து கொடுமைகள் புரிகின்றனர்.

இவற்றை எல்லாம் ஆழ்ந்து நோக்கினால் நமது சமுதாய அமைப்பில் தனிச் சொத்துடமை வகிக்கும் கேவலமான பாத்திரத்தையே கண்டு கொள்ள முடியும். இதற்கெல்லாம் ஒரு வழி இருக்குமானால் அது இன ரீதியில் அல்ல வர்க்க ரீதியில் உழைக்கும் வர்க்கம் ஒன்றிணைந்து தமது போராட்டத்தை முன்னெடுப்பதாகவே இருக்க முடியும். இன்றைய நிலையில் எவ்வளவுக்கு உச்ச நிலையில் வைத்து இன மொழி ரீதியிலான ஐக்கியம் பற்றிப் பேசினாலும் சமுதாயம் வர்க்க அடிப்படையில் தான் நடைமுறையில் இயங்கி வருகின்றது என்பதைக் கண்டு கொள்ள முடியும். தனிச் சொத்துடமையும் அதன் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ள பொருளாதார, அரசியல், சமூக அமைப்பு முறைகளும் பாட்டாளிவர்க்கத்தாலும், ஏனைய உழைக்கும் மக்களாலும் நிர்மூலமாக்கப்பட்டு புதிய அமைப்புகள் உருவாக்கப்படாதவரை உழைப்பாளி மக்களுக்கு விமோசனம் இருக்கமுடியாது இந்த அடிப்படை நிலையை உணர்ந்து உழைக்கும் மக்கள் தமது எதிர்கால விமோசனத்திற்கான அரசியல் மார்க்கத்தில் அணிதிரள்வது அவசியமாகும். ★

## இலங்கைத் தமிழர் பிரச்சினையில் மக்கள் சீனத்தின் நிலை

இலங்கையின் அண்மைய கால வன்முறையை ஒட்டி மக்கள் சீனக்குடியரசு தெரிவித்த கருத்துக்களை அரசாங்கம் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்த முனைந்தமையும் அதைச் சீனவிரோதிகள் தங்கள் இலாபத்துக்குப் பயன்படுத்துவதையும் நாம் உணர்கின்றோம். உண்மையில் சீனாவின் நிலைப்பாடு என்ன?

சீனா மூன்றாம் உலகநாடுகளில் தேசிய ஒற்றுமையை வலியுறுத்துகிறது. ஏனெனில் நாட்டின் இனங்களிடையிலான ஒற்றுமையின்மை எப்போதுமே ஏகாதிபத்தியவாதிகட்கு, குறிப்பாகப் பெரு வல்லரசுகட்கு, வாய்ப்பான ஒன்றாகவே இருந்து வந்துள்ளது.

சீனா நாடுகளின் "உள் விவகாரங்களில் பிறநாடுகள் தலையிடுவதை எப்போதுமே கண்டித்து வந்துள்ளது. ஆப்கானிஸ்தான், எல்சல்வடோர், காம்பூச்சியா ஆகிய விஷயங்களில் சீனாவின் நிலைப்பாடு மிகவும் தெளிவாகவேஉள்ளது இலங்கையின் பிரச்சினையை இலங்கையின் மக்களே தீர்க்க வேண்டும். பெரிய நாடுகளது தலையீடு பிரச்சனைகளை மேலும் மோசமாக்கும் என்பது நாம் கண்ட உண்மை.

சீனா இந்த அரசாங்கம் தேசிய ஒற்றுமையையும் நாட்டின் சுயாதிபத்தியத்தையும் காக்க எடுக்கும் முயற்சிகளை ஆதரிப்பதாக மிகவும் தெளிவாகவே கூறியுள்ளது. அது இலங்கை விஷயத்தில் மட்டும் அல்ல, எந்த நாட்டின் விஷயத்திலும் இவ்வாறே நடந்து வந்துள்ளது.

சீனா குறிப்பிடாத ஒரு விஷயம்: இந்த அரசாங்கம் சிறுபான்மை இனப் பிரச்சனையைத் தீர்க்கும் என்ற நம்பிக்கையை சீனா தெரிவிக்கவில்லை. அது இலங்கையின் உள் விவகாரம் அது சுமுகமாகத் தீர்க்கப்படும் என்றஎதிர்பார்ப்பை மட்டுமே சீனா தெரிவித்துள்ளது.

குழம்பிய குட்டையில் மீன்பிடிக்கும் பெரு வல்லரசுகளையோ அல்லது பெரிய நாடுகளையோ போலன்றி சீனா மிக நிதானமாகவே நடந்து கொள்கிறது. தமிழர் சிங்களவர் பிரச்சனை ஒரு பகை முரண்பாடாகக் கருதப் படக் கூடாது என்பதே சீனாவின் நிலைப்பாடு. பிரிவினையை ஆதரிப்பதாகப் பாவனை செய்துகொண்டு தம் உள்நாட்டு அரசியலில் லாபம் தேடும் சக்திகளை இனங்காணத் தவறும் எவரும் சீனா பற்றி மனம் நோக இடமுண்டு. இலங்கையின் உள் நாட்டுத் தகராறில் இரண்டு தரப்புகளையும் தூண்டிவிட்டுக் குழப்பமூட்டும் சக்திகளை நாம் விரைவில் அடையாளம் காணமற் போகமாட்டோம். சில சக்திகளின் போலி அனுதாபத்துக்கும் பொய்யான ஆதரவுக்கும் பலியாகி மேலும் பிரச்சனைகளை உக்கிரமாக்குவது எம்மில் எவருக்கும் நல்லதல்ல. ஏமாற்றுக்காரர்கள் கடைசியில் ஏமாந்தே போவார்கள். அந்நியநாடுகள் பற்றி நீண்ட காலமாகவே கடைப்பிடிக்கப்படும் சீனாவின் நிலைப்பாடு மிகவும் நேர்மையான ஒன்று என்பதை பல பிரிவினைவாதிகளும் விரைவில் உணரவே செய்வர். ★

# அந்நியத் தலையீட்டைத் தவிர்க்க தமிழர் பிரச்சினையின் தீர்வு அவசியம்

## பெருமுதலாளித்துவ - பேரினவாத ஆட்சியால் நாட்டின் சுதந்திரத்திற்கு ஆபத்து ஏற்படலாம்

கடந்த யூலை மாதத்தில் இடம்பெற்ற தமிழ்மக்களுக்கு எதிரான கொடூரச் சம்பவங்கள் தமிழர் பிரச்சனையை சர்வதேச சமூகத்தின் முன்னிலைக்கு கொண்டு வந்துள்ளது. தமிழ் மக்களுக்கு இழைக்கப் பட்டுள்ள காட்டுமிராண்டித் தனமான கொடுமைகளுக்கு அரசாங்க ஆதரவும், ஆயுதப் படைகளின் ஒத்துழைப்பும் இருந்தன என்ற சர்வதேசப் பத்திரிகைகளின் நியாயமான குற்றச்சாட்டுதல்களை நேர்மையான சிங்கள மக்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர். இதன் பிரதிபலிப்பாகச் சிங்களப் புத்திஜீவிகள் பலர் தமது நியாயமான கருத்துக்களை பத்திரிகைகளில் வெளியிட்டும் உள்ளனர். அத்துடன் தேசியப் பிரச்சனையாகிவிட்ட தமிழர் பிரச்சினை தீர்த்து வைக்கப்படவேண்டிய அவசியத்தை வலியுறுத்தியும் வருகின்றனர்.

இலங்கைத் தமிழர்களுக்கு நடைபெற்ற இன்னல்கள் பற்றி இந்தியாவின் தென் பகுதியில் வாழும் ஐந்து கோடி தமிழ் மக்கள் ஆத்திர உணர்வுக்கும் அனுதாபநிலைக்கும் ஆளாக்கப்பட்டது இயல்பான தொன்றே. இருந்த போதிலும் சில தென்னக அரசியல் வாதிகள் யதார்த்த நிலைமைகளுக்கு அப்பால் இலங்கைத் தமிழரின் பிரச்சினையைத் தமது தேவைகளுக்கு பயன்படுத்த எடுக்கும் முயற்சிகள் வரவேற்கக்கூடிய தொன்றல்ல. அதே போல் இந்திய அரசு இலங்கைத் தமிழரின் பிரச்சினையில் அக்கறையும், அனுதாபமும் கொண்டிருக்குமானால் அது இதுவரை கூறிவரும் "தலையிடாக் கொள்கையுடனும்" "தீர்வைத் துரிதப்படுத்த உதவும்" நடைமுறையுடன் மட்டும் நின்று கொள்ளல் வேண்டும் என்பதே நியாயமான நிலையாகும். ஏனெனில் இலங்கைத் தமிழரின் பிரச்சினை போன்றும் அதன் தீர்வுக்கு முன் வைக்கப்படும் வழிமுறைகள் போன்றும் இன்று இந்தியாவில் சீக்கியர் பிரச்சினை, அசாம் மாநிலப் பிரச்சினை, காஷ்மீர் பிரச்சினை போன்றன தீவிரம் அடைந்து வருவதை இந்திய அரசானது அனுபவித்து வருகிறது. இதனால் இந்திய அரசு இலங்கைத் தமிழரின் பிரச்சினையில் எவ்வாறு நடந்து கொள்ளப் போகிறது என்பது குறுகிய காலத்தில் பொறுத்திருந்து பார்க்க வேண்டிய ஒரு விடயமாகும்.

எவ்வாறாயினும் ஒரு உண்மையை நாம் கண்டு கொள்வது அவசியம். இன்று இலங்கை அரசின் பின்னால் அமெரிக்க ஏகாதிபத்தியமும் அவர்களது கூட்டாளிகளும் ஒருபுறமாகவும், இந்திய அரசின் பின்னால் சோவியத் மேலாதிக்க வாதிகளும் அவர்களது கூட்டாளிகளும் மறுபுறமாகவும் ஒன்றுசேர்ந்து வருகிறார்கள் என்பது மறைக்கக் கூடிய ஒரு விடயமல்ல. ஆகலால் இன்றைய சர்வதேச சூழ்நிலையில் சிறிய நாடாக இருந்தபோதிலும் இந்து சமுத்திரத்தின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்தஇடத்தில் நமதுநாடு அமைந்திருப்பதன் காரணமாக இரண்டு மேலாதிக்க வல்லரசுகளின் பலமான கண்வைத்தலுக்கு இலக்காகி

நமது நிருபர்

உள்ளோம் என்பதை மறுப்பது தேசிய சர்வதேசிய அரசியல் விவேகமாகாது. ஆதலால் நாட்டில் ஏற்படும் எந்த ஒரு பிரச்சினையையும் சாட்டாக வைத்து இங்கு கால்பதிப்பதில் இவ்விருவல்லரசுகளும் மறைமுகப் போட்டியில் இறங்கி விரைவாகவே நேரடிப் பலப் பரீட்சைக்கு வரும் அபாயத்தை இலங்கையின் சகல தரப்பு மக்களும் உணர்ந்து கொள்வது அவசியமாகும்.

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினை இன்றைய நிலைக்கு வளர்ந்திருப்பதைத் தடுப்பதற்கும், நியாயமான வழிகளில் தீர்த்துவைப்பதற்கும் உரிய பல சந்தர்ப்பங்கள் நமது நாட்டின் அரசியல் வரலாற்றில் ஏற்கனவே இருந்தன. ஆனால் முதலாளித்துவ பாராளுமன்ற அரசியலும், பேரினவாதப் போக்கும் அதே வேளை குறுகிய சிறுபான்மைத் தேசியவாத நிலைப்பாடும் பிரச்சனைகள் தீர்த்துவைக்கப் படுவதை அனுமதிக்க வில்லை; பதவிக்கு வந்த சகல அரசாங்கங்களும் தத்தமது பதவி நீடிப்புக்கும், இலங்கையின் பிரதான முரண்பாட்டில் இருந்து மக்களின் கவனத்தை திசை திருப்புவதற்கும் தமிழர் பிரச்சனையை ஒரு கருவியாகப் பாவித்தனவே அன்றி அதன் எதிர்கால விளைவுகளின் பாரதூரத் தன்மையைப் புரிந்து கொள்ளமறுத்தன.

இலங்கைத் தமிழர் பிரச்சினை நாட்டின் பொருளாதார அரசியல் பிரச்சினைகளின் வெளிப்பாடுகளே. பெரு முதலாளித்துவ சக்திகளான யூ.என்.பி. பதவிக்கு வந்த பின் தமிழ் மக்களுக்கு எதிராக நான்கு தடவைகள் கட்டவிழ்த்து விடப்பட்ட மோசமான இனவாத வன்செயல்களால் இலங்கையின் இன்றைய பிரதான முரண்பாட்டில் மாற்றம் எதுவும் ஏற்படவில்லை. இன்றும் இலங்கையின் தேசிய இனப் பிரச்சினை முதலாம்தர முரண்பாடாக இருக்கமுடியாது என்பதே மார்க்சிச லெனினிசவாதிகளின் உறுதியான கருத்தாகும். அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தலைமையிலான நவகாலனித்துவ சக்திகளும் அதற்கு சேவைசெய்யும் யூ.என்.பி க்கும் இலங்கை மக்களுக்குமிடையிலான முரண்பாடே பிரதான முரண்பாடாகும். இப் பிரதான முரண்பாட்டின் தன்மையினால் ஏற்பட்டுவரும் பல்வேறு வித நெருக்கடிகளையும் மோசமான பொருளாதாரச்

(7ம் பக்கம் பார்க்க)

### ஆளும் கட்சி அமைச்சர்கள் இப்படிக் கூறுகிறார்கள்

'மன்னன் துட்டகெமுனுவின் பெயரால் சிங்கள-தமிழ் துவேஷத்தை வளர்க்க சிலர் முயலுகிறார்கள். இத்தகைய முயற்சிகளை நாம் ஒரு போதும் அனுமதிக்க முடியாது.'

-பிரதமர் ஆர். பிரேமதாசா

'தமிழர்களுக்கு தமிழ் நாடு உண்டு. முஸ்லீம்களுக்கு நாடுகள் உண்டு. சிங்களவர்களுக்கு இந்த நாட்டை விட்டால் வேறுநாடே கிடையாது எனவே சிங்களவர் உரிமைக் குரல் கிளப்ப வேண்டும்.'

-அமைச்சர் சிறில் மத்தியூ

'தமிழ் மொழிக்கும் சிங்கள மொழிக்கும் பலவித ஒற்றுமைகள் உண்டு. அப்படியாயின் அம்மொழிகளைப் பேசும் சிங்கள-தமிழ் மக்கள் ஏன் ஒற்றுமையுடன் வாழ முடியாது.'

-அமைச்சர் அத்துலத் முதலி

'மாவலித் திட்டத்தின் பயன்களை மக்கள் அனுபவிக்க வேண்டுமானால் மதுறு ஓயாப் பகுதிகளில் குடியேறுவது அவசியம்.'

-அமைச்சர் காமினி திசநாயக்கா

'சிங்களவர்களாகிய நாம் ஆரியர், வட இந்தியர்களும் ஆரியர்களே. எமது ஜனாதிபதியின் மூக்கும் இந்திரா காந்தியின் மூக்கும் ஒரேமாதிரியாகவே உள்ளது.'

-அமைச்சர் சொய்சாபண்டார

'சிங்கள மக்கள் தமக்கிடையில் உள்ள வேற்றுமைகளை மறந்து புலிகளுக்கு எதிராக ஐக்கியப்பட வேண்டும்.'

-அமைச்சர் ரெஜினிடிமெல்

# சிங்கள மக்கள் மத்தியிலிருந்து சில கருத்துகள்

'தமிழ் மக்களின் பிரச்சினை இன்று ஒரு தேசியப் பிரச்சினையாகிவிட்டது. இது அவசியம் தீர்த்து வைக்கப்பட வேண்டும். தமிழர் விடுதலைக்கூட்டணி சரியாகவோ அன்றித் தவறாகவோ தேர்தலில் தமிழ் மக்களிடம் ஒரு ஆணையைப் பெற்றுள்ளது. எனவே அந்த ஆணைக்கு ஒரு மாற்றுத்திட்டத்தை அரசு முன்வைப்பதன் மூலமே தமிழர் கூட்டணியினர் தமிழ் மக்களிடம் செல்ல முடியும். சகல கட்சியினரும் மந்திரி சபையினரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய மாற்றுத் திட்டத்தை முன்வைத்து தமிழர் பிரச்சனைக்குத் தீர்வு காண்பதையே நாம் விரும்புகின்றோம்.'

-திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா

'இனவாத மோதல்களால் நாட்டுக்கும் மக்களுக்கும் பெரு நட்டமும் வேதனையும் ஏற்படுகிறது. வாசெட்ட என்ற பிராமணனுக்கும் பாரத்வாஜ என்ற பிராமணனுக்கும் இடையில் ஏற்பட்ட இனவாதத்திற்கு புத்தர் வாசெட்ட சூத்திரம் என்ற போதனையை நடத்தினார். ஆனால் இப்போதுள்ள பௌத்த பிக்குகள் இதைப் போதிப்பதில்லை. பதிலாக துட்டகெமுனு தமிழர்களைக் கொன்று குவித்ததாகக் கூறப்படும் ஒரு கதையையே போதிக்கிறார்கள். அதனால் தான் துட்டகைமுனுவின் வீரச்செயல் என்று சொல்லும் பௌத்த வரலாற்று நூலான மகாவம்சத்தை முற்றாக எரித்து சாம்பராக்க வேண்டும் என்று நான் கூறுகிறேன். இனவாதத்தைப்பரப்புகிறவன் ஒரு பைத்தியக்காரன். முழு மனித இனத்தினதும் பரம எதிரி.'

-கலாநிதி ஈ. டபிள்யூ. அதிகாரம்

'ஒருவர் சிங்கள சார்பினராக இருந்தால் அவர் தமிழ் விரோதியென கண்டிப்பதாகக் கருதப்பட வேண்டுமா? தமிழ் விரோத உணர்வுகளைக் கொண்டிருக்கும் சிங்களவர்கள் மத்தியில் அத்தகைய உணர்வுகள் எழுவதற்கு ஒரு காரணம் எமது சொந்தப் பலவீன உணர்வும், எமது தவறாக வர்ணிக்கப்பட்ட கலாச்சார தனித்துவமும் என நான் கருதுகிறேன். எமது கலாசார அடையாளங்கள் காணும் உணர்வு தமிழ் கலாசாரத்துடனான எமது தொடர்பின் மூலம் ஏன் வலுப்படமுடியாது, இரு சமுதாயங்களுக்கிடையிலான மொழித் தடைகளை அகற்றுவதன் மூலம் அதாவது சிங்களவர் தமிழ் மொழியையும், தமிழர் சிங்கள மொழியையும் கற்பதன் மூலம் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளவும், மதிக்கவும் கூடிய நிலை ஏற்படும்.'

-கலாநிதி எதிரிவீர சரச்சந்திரா

'தனிநாடு கோரும் இயக்கத்திற்கு எதிரான நடவடிக்கைகள் வேறுவிடயம். ஆனால் தமிழ் மக்களையும் அவர்களது உடமைகளையும் தீயிட்டுக் கொழுத்தியதையும் அவற்றைக் கொள்ளை அடித்ததையும் நியாயப்படுத்துவதும், 'அச்செயல்களை பெரும்பான்மை இனத்துள் ஒரு சிறு குழுவே செய்தது' என்று கூறுவதும் எமக்கு எவ்விதத்திலும் பெருமை தராது. அரசின் இது போன்ற பிரச்சாரங்கள் அரசு சார்பு சக்திகளின் மனச்சாட்சிக்கு ஆறுதல் அளிக்கக்கூடும். ஆனால் கலவரங்களை நேரில்பார்த்த மக்களின் மனதில் உள்ள சந்தேகங்களையும். பயத்தையும் அரசின் பிரசாரங்கள் போக்கிவிடமுடியாது.'

-கலாநிதி ஈ. ஞானசேகர

'பற்றி எரியும் அரசியல் பிரச்சினைக்கு கல்விமான்களாகிய நாம் எண்ணெய் வார்ப்பதை விடுத்து பரந்த கண்ணோட்டத்துடன் எல்லா மாணவர்களையும் ஒரேநோக்கில் அணுகி பிரச்சனைக்குப் பரிகாரம் தேடவேண்டும். மாணவர்களின் கல்வியில் இனவாதத்தைப் புகுத்தாதீர்கள் நாடு சுதந்திரமடைந்த பின் ஆட்சி செய்த அரசாங்கங்கள் கடைப்பிடித்துவந்த கொள்கை காரணமாகவே இந்நிலை ஏற்பட்டுள்ளது. அதற்காக அப்பாவி மாணவர்களை தண்டனைக்குள்ளாக்கக் கூடாது. அண்மையில் இடம்பெற்ற கலவரத்தில் பிரபல தமிழ் வைத்திய நிபுணர்கள் கொலை செய்யப்பட்டனர். நோய்வாய்ப்படும் ஒருவர் இவர் தமிழ் டாக்டர், மற்றவர் சிங்கள டாக்டர் என்ற நோக்குடன் வைத்தியம் செய்யப் போவதில்லை. அந்தநிலை வந்தால் டாக்டர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப நோயாளிகளின் தொகையையும் கட்டுப்படுத்த வேண்டி வரும். எந்தப்பிரச்சினையையும் யதார்த்த பூர்வமாக நாம் அணுக வேண்டும்.

-பேராசிரியர் டபிள்யூ. எஸ். கருணாரத்தின

# எங்கிருந்து தொடங்குவது?

## லெனின்
**1901 மே**

“என்ன செய்யவேண்டும்?” என்ற கேள்வி, கடந்த சில ஆண்டுகளாக, ருஷ்ய சமூக-ஜனநாயகவாதிகளை எதிர்நோக்கும் மிக அவசரமான கேள்வியாக உருப்பெற்றிருக்கிறது. (1880ம் ஆண்டுகளின் இறுதியிலும் 1890ம் ஆண்டுகளின் தொடக்கத்திலும் இருந்தது போல) எந்தத் திசைவழியைத் தேர்ந்தெடுத்துக் கொள்வது என்பதல்ல, தேர்ந்து தெளிந்த திசைவழியில் செல்வதற்கு என்னென்ன நடைமுறை நடவடிக்கைகளை எவ்வாறு மேற்கொள்வது என்பதுதான் இப்போதைய பிரச்சினை. நடைமுறை வேலைக்கான அமைப்பு, திட்டம் ஆகியவற்றைப் பற்றியது இப்போதைய பிரச்சினை. நடைமுறை வேலையில் ஈடுபடும் கட்சிக்குரிய இந்த அடிப்படையான பிரச்சினை-போராட்டத்தின் தன்மையையும் வழிமுறைகளையும் பற்றிய இந்தப் பிரச்சினை—நம்மால் இன்னும் தீர்க்கப்படவில்லை என்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். மேலும், இப்பிரச்சனை சிந்தப் போக்கின் கடைசி “வேலைத்திட்ட” அறிக்கை—“வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த திருப்பம்” என்ற ஆடம்பரத் தலைப்பிட்ட ஆடம்பரக் கட்டுரை (லிஸ்தோக் ரபோச்கிவோ தெலா, இதழ் 6) இந்தப் போக்கைப் பற்றிய நமது பண்புரைலைத் தெள்ளத் தெளிவாக மெய்ப்பிக்கிறது. அவர்கள் நேற்றுத்தான் “பொருளாதாரவாதத்துடன்” பசப்புக் காதல் புரிந்தார்கள்; ரபோச்சயா மீசில் பற்றிய உறுதியான கண்டனத்தைக் கண்டு வெஞ்சினம் கொண்டார்கள்; ஏதேச்சாதிகாரத்தை எதிர்த்து நடத்தும் போராட்டத்தைப்பற்றி பிலெஹானவ் முன்வைத்த கருத்தின் வேகத்தைக் ‘குறைக்க’ முயன்றனர். இன்றோ, ‘சூழ்நிலைகள் 24 மணி நேரத்தில் மாறினால் போர்த்தந்திரங்களும் 24 மணி நேரத்திற்குள் மாற வேண்டும்’ என்று லீப்க்னெஹ்ட் சொன்னதை மேற்கோள் காட்டுகிறார்கள். ஏதேச்சாதிகாரத்தை நேரடியாகத் தாக்குவதற்கு, கடுமையாகத் தாக்கி அழிப்பதற்கு, ‘பலம் வாய்ந்த போராட்ட அமைப்பு’ வேண் தேலோ இவ்வளவு விரைவாக மேற்கொண்டதைக் குறித்து நாம் ஒருகால் திருப்தியைத் தெரிவித்திருக்கலாம்; ஆனால் நம் வேலைத்திட்டத்தை மேற்கொண்டவர்களிடம் எவ்வித உறுதியான நோக்கு நிலையும் இல்லாதிருப்பது, முழு திருப்தியைப் பாழ்படுத்திவிடக் கூடியது.

ரபோச்சியே தேலோ லீப்க்னெஹ்ட் பெயரை வீணாகக் குறிப்பிட்டுள்ளது. ஒரு தனிப்பட்ட பிரச்சினைபற்றிய கிளர்ச்சியின் போர்த்தந்திரங்களையோ, கட்சி அமைப்பின் ஏதாவதொரு விவரம் பற்றிய போர்த்தந்திரங்களையோ, 24 மணிநேரத்தில் மாற்றிக் கொள்வது சாத்தியம். ஆனால் போர்த்தன்மை கொண்ட அமைப்பும் திரளான மக்களுக்கிடையே அரசியல் கிளர்ச் செயல்திட்டத்தைப் பற்றிப் பேசுவதற்கே இடமில்லை. அத்தகைய செயல்திட்டமே போர்த் தந்திரங்களென்று குறிப்பிடப் பெறுவதற்குத் தகுதியானது. இவர்களது கூற்றைத்தான் சற்றுப் பார்ப்போம்! ‘வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தகாலம்’, பயங்கரவாதம் என்ற ‘புத்தம் புதிய’ பிரச்சினையை நம் கட்சிக்குமுன் வைத்திருக்கிறது. என்று சொல்கிறார்கள். நேற்று அரசியல் அமைப்பும் கிளர்ச்சியும் ‘புத்தப் புதிய’ பிரச்சனையாக இருந்தவைப்; இன்றோ பயங்கரவாதம் ‘புத்தம் புதிய’ பிரச்சனையாக உருவாகியிருக்கிறதாம். முந்தையதற்கும் பிந்தையதற்கும் இடையே உள்ள தொடர்பைச் சிறிதும் நினைவுகூராத இந்த நபர்கள், போர்த்தந்திரங்களைத் தீவிரமாக மாற்றுவதைப் பற்றி விவாதிப்பது விந்தையாக இல்லையா?

நல்ல காலமாக ரபோச்சியே தேலோவின் கருத்து சரியில்லை. பயங்கரவாதம் என்பதைப் புதிய பிரச்சினையாகக் கருதுவதற்கு சிறிதும் ஆதாரமில்லை. இப்பிரச்சனையின் நலன்களைக் கருதுங்கால் மிகமிக அதிகமான முக்கியத்துவம் வாய்ந்த உண்மைக் கடமையிலிருந்து அப்பால் திருப்புகிறது என்றும், அது அரசாங்கச் சக்திகளை அல்ல, புரட்சிச் சக்திகளையே சிதைக்கிறது என்றும் நாம் உறுதியாகப் பிரகடனம் செய்து வருகிறோம். அண்மைக்கால நிகழ்ச்சிகளை நினைவூட்டிக் கொள்ளுங்கள்: நம் கண்ணெதிரே மிகப் பரந்த அளவிலான நகரத் தொழிலாளரும் ‘சாமானியக் குடிகளும்’ போராட்டத்தில் குதிக்கத் துடிதுடிக்கிறார்கள். ஆனால் புரட்சியாளர்களுக்குத் தலைவர்களையும் அமைப்பாளர்களையும் கொண்ட செயற்குழு எதுவும் இல்லை. இத்தகைய சூழ்நிலைகளில் ஆற்றல் மிக்க புரட்சியாளர்கள் பயங்கரவாதத்தைத் தழுவுவதால், நாம் எந்தப் போர்ப் படைகள் மீது உண்மையில் நம்பிக்கை வைக்கலாமோ அந்தப் போர்ப் படைகள் பலவீனமடையும் என்ற ஆபத்து ஏற்படாதா? அதிருப்தி அடைந்து, எதிர்ப்பு தெரிவித்துக் கொண்டு, போராட்டத்துக்

# ஏதேச்சதிகாரத்தை ஒழித்துக்கட்ட பலம் வாய்ந்த பாட்டாளி வர்க்க கட்சி அமைப்பு அவசியம்!

தலைமையின் வருந்தத்தக்க நிலையின்மையையும் ஊசலாட்டத்தையும் வெளிப்படுத்துகின்ற ஆழமான கருத்து வேற்றுமைகளை எழுப்பிக்கொண்டிருக்கிறது என்பதையும் நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். ஒருபுறத்தில், “பொருளாதாரப்” போக்கு அழிந்தொழிவதற்கான அறிகுறி ஏதும் இல்லை; அது அரசியல் அமைப்பு வேலையையும் அரசியல் கிளர்ச்சி வேலையும் குறைக்கவும் குறுக்கவும் முயன்று கொண்டிருக்கிறது. மறு புறத்தில், கோட்பாடற்ற கதம்பவாதப் போக்கு முன்போலத் தற்பெருமையுடன் தலை நிமிர்ந்து நிற்கிறது. இந்தக் கதம்பவாதம் ஒவ்வொரு புதிய “போக்குக்கும்” உகந்தவாறு தன்னைத் தகவமைத்துக் கொள்கிறது, முழு இயக்கத்தின் அடிப்படையான கடமைகளிலிருந்தும் நிரந்தரத் தேவைகளிலிருந்தும் தற்காலிக அவசியங்களை அதனால் வேறுபடுத்திப் பார்க்க முடியாது. இத்தகைய போக்கு தன் இருப்பிடமாக ரபோச்சியே தேலோ ஏட்டைத் தேர்ந்தெடுத்து விட்டதென்பது தெரிந்த விஷயம். இந்டும் என்று பேசுகிறார்கள். ‘பரவலான, புரட்சிகரமான அரசியல் கிளர்ச்சியை’ (இப்போது எத்தகைய செயலூக்கம்—புரட்சிகரமான கிளர்ச்சியாம், அரசியல் கிளர்ச்சியாம்!) ‘பொதுமக்களிடையே நடத்துவதைப்’ பற்றியும், ‘கண்டனம் செய்யத் தெருவிற்கு வரும்படி இடைவிடாமல் அழைக்கவேண்டும்’ என்பதைப்பற்றியும், ‘அழுத்தமான’ (கவனிக்க!) ‘அரசியல் தன்மைபெற்ற தெரு ஆர்ப்பாட்டங்களை நடத்த வேண்டும்’ என்பதைப்பற்றியும், இவற்றையொத்த பிறவற்றைப் பற்றியும் பேசுகிறார்கள்.

இஸ்க்ராவின் முதல் இதழிலேயே நாம் முன்வைத்த வேலைத்திட்டத்தை-தனித்தனிச் சலுகைகளைப் போராடிப் பெறுவதோடு நில்லாமல், ஏதேச்சாதிகாரக் கோட்டையையே வன்மையாகத் தாக்கி அழிப்பதை நோக்கமாகக்கொண்ட, நிறுவன முறையில் அணுதிரண்ட பலம் வாய்ந்த கட்சியை அமைக்க வேண்டுமென்ற நம் திட்டத்தை-ரபோச்சியே சியும் பொதுவாக எப்போதும் இன்றியமையாத தேவைதானா என்பதைக் குறித்துத் தம் கருத்தை 24 மணியில், ஏன், 24 மாதத்தில்கூட எந்தக் கோட்பாடும் இல்லாத நபர்கள் தான் மாற்றிக் கொள்ள முடியும். இதைப் பொறுத்தமட்டில், சூழ்நிலை மாறிவிட்டதென்றும் காலம் மாறிவிட்டதென்றும் வாதிப்பது பரிகசிக்கத்தக்கதாகும்; போர்த்தன்மை வாய்ந்த அமைப்பை உருவாக்குவதும் அரசியல் கிளர்ச்சியை நடத்துவதும் ‘மந்தமான, அமைதியான’ எல்லாச் சூழ்நிலைகளிலும், ‘புரட்சிகரமான ஊக்கம் குன்றித்தேய்ம்’ எல்லாக் காலங்களிலும் கட்டாயமாக ஆற்றவேண்டிய கடமையாகும். அதுமட்டுமல்ல. அந்தச் சூழ்நிலையிலும் அந்தக் காலப் பகுதிகளிலும்தான், இத்தகைய வேலை மிக அவசியமாகும்; ஏனென்றால், புரட்சிக் கலகங்கள் திடீரென்று வெடித்தெழும் நேரங்களில் அமைப்பை அமைப்பதென்பது காலம் கடந்த முயற்சி ஆகிவிடும். நொடி நேர எச்சரிக்கையில் செயலில் இறங்குவதற்குத் தயார் நிலையில் அமைப்பு இருக்கவேண்டும். ‘இருபத்துநான்கு மணி நேரத்தில் போர்த்தந்திரங்களை மாற்றிக் கொள்வதாம்’! ஆனால் போர்த்தந்திரங்களை மாற்றிக் கொள்வதற்கு முதலிலேயே போர்த்தந்திரங்களை வகுத்திருக்கவேண்டுமே. எல்லாவிதச் சூழ்நிலைகளிலும் எல்லாக் காலங்களிலும் நடத்தப்பட்ட அரசியல் போராட்டத்தில் சோதிக்கப்பெற்ற வலுவான அமைப்பு இல்லாமல், உறுதியான கோட்பாடுகளால் ஒளியூட்டப்பட்டு விடாப்பிடியாக நிறைவேற்றப்பெறும் முறையான வையைப் பற்றி ருஷ்ய சமூக ஜனநாயகவாதிகளுக்கிடையே உறுதியாக நிலவிய கருத்து என்ன என்பதைச் சுருக்கமாக விளக்கினால் போதுமானது.

கோட்பாடு ரீதியில் நாம் பயங்கரவாதத்தை ஒரு பொழுதும் நிராகரித்ததில்லை நிராகரிக்கவும் முடியாது. பயங்கர வாதம் என்பது போராட்ட நடவடிக்கையில் ஒருவகையாகும். அது படையின் குறிப்பிட்ட நிலையையும், குறிப்பிட்ட சூழ் நிலைகளையும் பொறுத்து, போராட்டத்தின் குறிப்பிட்ட தருணத்தில் முற்றிலும் பொருத்தமாக இருப்பதுமட்டுமின்றி இன்றியமையாததாகவும் கூட இருக்கலாம். ஆனால் இவர்களது கூற்றின் சாரம் என்ன? போராட்டத்தின் முழு ஏற்பாட்டுடன் நெருக்கமாகப் பின்னிப் பிணைந்த வகையில், களம் புகுந்து போர் புரியும் படையின் ஒரு நடவடிக்கையாக இவர்கள் இப்போது பயங்கரவாதத்தைக் கருதாமல், எந்தப் படையுடனும் தொடர்பற்ற விதத்தில், தனித்து நிற்கும் தாக்குச் செயலாகவே அதனைக் கூறிப் பேசுகிறார்கள். மைய அமைப்பு இல்லாத நிலையில், வட்டாரப் புரட்சி அமைப்புகள் பலவீனமாக இருக்கும் நிலையில், பயங்கரவாதம் இந்த வகையிலேதான் உருவாகும். எனவேதான், தற்போதைய சூழ்நிலையில் இத்தகைய போராட்ட முறை காலத்திற்கு ஒவ்வாததாயும் பொருத்தமற்றதாயும் உள்ளதென்று நாம் உறுதியாகச் சாதிக்கின்றோம். மேலும் இப்போராட்ட முறை தீவிரமாகப் போராடும் வீரர்களின் கவனத்தை, முழு இயக்கத்துக் சித்தமாயிருப்பவர்களும் சிதறியிருக்கும் காரணத்தால் மட்டுமே வலுக்குறைந்திருப்பவர்களுமான திரளான மக்களுக்கும் புரட்சி அமைப்புகளுக்குமிடையே உள்ள தொடர்பு துண்டிக்கப்பெறும் என்ற ஆபத்து ஏற்படாதா? அந்தத் தொடர்புதானே நமது வெற்றிக்கான ஒரே உத்தரவாதம். தனிப்பட்ட வீரச் செயல்களின் முக்கியத்துவத்தை மறுக்கும் நோக்கம் நமக்குச் சிறிதும் இல்லை. ஆனால் பயங்கரவாதத்தை மிக அதிகமாகப் பயன்படுத்துவதை எதிர்த்தும், அதை முதன்மையான, அடிப்படையான போராட்ட முறையாகக் கருதுவதை எதிர்த்தும் கடுமையாக எச்சரிப்பது நம் கடமை. மேற்சொன்ன கருத்து இப்போது மிகப் பலரை ஈர்த்திருக்கிறது. பயங்கரவாதம் என்பது போராட்ட நடவடிக்கைகளில் முறையானதொன்றாக ஒருபொழுதும் இருக்கமுடியாது. அதிகமாகச் சொல்லப் போனால், தீர்மானமான தாக்குதலின் வழிமுறைகளில் ஒன்றாக அது பயன்படலாம், ஆனால் தீர்மானமான தாக்குதலைத் தொடுக்கும்படி மக்களை இப்போது அழைக்கமுடியுமா? ரபோச்சியே தேலோ அப்படித்தான் நினைப்பதாகத் தோன்றுகிறது. எவ்வாறாயினும், ‘தாக்கும் படையில் அணிதிரளுங்கள்!’ என்று அது கூவுகிறது. ஆனால் இவ்

(7ம் பக்கம் பார்க்க)

> கட்சி துப்பாக்கி மீது ஆணை செலுத்த வேண்டும். கட்சி மீது துப்பாக்கி ஆணை செலுத்துவதை ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது. இதுவே நமது கோட்பாடு.
>
> மாஓசேதுங்

# உலக சமாதானம் பற்றிய சீனாவின் நிலை

## ஐ. நா. சபையில் சீன வெளிநாட்டமைச்சர்

ஐ. நா. சபையின் 38வது கூட்டத்தொடரில் கலந்து கொண்ட சீன வெளிநாட்டமைச்சர் வூசெசியன் ஆற்றிய உரையில் இருந்து ஒரு பகுதியை இங்கே தருகின்றோம்.

[ஆ. குழு.]

உலக சமாதானத்தைப் பாதுகாக்கவேண்டுமென்பதே இன்று மனித குலத்தை எதிர்நோக்கும் மிக முக்கியமான கடமையாகும். இதுவே உலக மக்கள் அனைவரினதும் முதன்மையான கரிசனையுமாகும். சர்வதேச சூழல் ஒரு நீண்ட காலத்திற்கு அமைதியுடையதாய் இருக்கவேண்டுமென்பது சீனமக்களது பேரவா ஆகும். உலகின் ஏனைய மக்களைப் போலவே நாமும் சர்வதேச சமாதானத்தையும் பாதுகாப்பையும் நிலைநிறுத்த வேண்டுமென்ற ஆழ்ந்த அக்கறை கொண்டுள்ளோம். எவ்வாறுயினும் நாம் கசப்பான உண்மை நிலையை எதிர்கொள்ள வேண்டியவர்களாகவே உள்ளோம். இன்றைய உலகம் அமைதியிலிருந்து தொலைதூரத்தில் உள்ளது. அது பதட்டமும், கொந்தளிப்பும் நிறைந்துகாணப்படுகிறது மேலாதிக்க வல்லரசுகளுக்கிடையே மோசமான ஆயுதப் போட்டாபோட்டியும், நடுத்தர ரக அணு ஆயுதங்களை நிலைகொள்ளச்செய்வது தொடர்பாக உள்ள இழுபறிப்பாடும் ஐரோப்பாவை ஒரு கடினமான முட்டிமோதும் நிலைக்கு கொண்டுவந்துள்ளது. மூன்றும் உலக நாடுகளுக்கு எதிராக மேலாதிக்க வாதிகளின் ஆக்கிரமிப்புப் போட்டியானது ஆசியா, ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்க பகுதிகளில் அடிக்கடி யுத்தத்திற்கும் அவசரநிலைக்கும் இட்டுச் சென்றுள்ளது. சில வளர்ச்சியடைந்த நாடுகள் தமது பொருளாதார நெருக்கடியை ஏனைய நாடுகள் மீது சுமத்தி பல வளர்ச்சியடையும் நாடுகளைப் பெரும் பொருளாதாரக் கஷ்டங்களுக்குள் தத்தளிக்கச் செய்துள்ளன. இவையனைத்தும் பல நாடுகளில் அழிவைக் கொண்டு வந்துள்ளதுடன் உலக சமாதானத்திற்கு ஒரு பெரும் அச்சுறுத்தலாகியும் உள்ளன.

மேலாதிக்கத்தைத் தீர்க்கமாக எதிர்ப்பதன் மூலமே உலக சமாதானத்தை நற்பயனளிக்கும் விதத்தில் நிலைநிறுத்த முடியுமென்பதை மிகவும் தெளிவாக மேலும் மேலும் சகல நாட்டுமக்களும் உணர்ந்து வருகின்றனர். ஏராளமான மூன்றும் உலக நாடுகளும் உலக மக்களும் விஸ்தரிப்பு, ஆக்கிரமிப்பு, ஆதிக்க அரசியல் போன்றவற்றுக்கு எதிராக ஐக்கியப்பட்ட போராட்டத்தைப் பலப்படுத்தியுள்ளதால் மோதிக்க வல்லரசுகள் தமது மேலாதிக்க கொள்கையைத் தொடர்வதில் தீவிரமான எதிர்ப்பையும் தடங்கல்களையும் எதிர்நோக்குகின்றன. உலகமக்கள் உண்மையாக ஐக்கியப்பட்டு மேலாதிக்கத்தின் சகல வெளிப்பாடுகளுக்கும் எதிராக ஒரு தீர்க்கமான போராட்டத்தை செய்வதன் மூலம் உலக சமாதானம் பேணப்பட முடியுமென்பதில் எமக்கு நம்பிக்கை உண்டு.

சகல சமாதானம் விரும்பும் நாடுகளும், மக்களும் ஆயுதப் பரிகரணம் ஏற்பட வேண்டுமென பேரவா கொண்டுள்ளதோடு பல வழிகளில் தமது விருப்பத்தைத் தெரிவித்துள்ளன. சில நாடுகளில் பிரமாண்டமான அளவில் சமாதான இயக்கங்கள் தோன்றியுள்ளன. இரண்டு உலகயுத்தங்களில் பெரும் அழிவை அனுபவித்த மக்கள் தற்போது ஓர் அணு ஆயுத யுத்த அபாயத்தை எதிர்நோக்கியுள்ளனர். அவர்களுடைய அபிலாஷைகள் விளங்கிக்கொள்ளக் கூடியதும் அனுதாபத்திற்குரியதுமாகும்.

ஆயுதப் பரிகரணத்திற்கு உண்மையான விருப்பம் இருந்தால் மட்டுமே ஆயுதப் பரிகரணத்தில் முன்னேற்றம் ஏற்படும் என்பதைச் சரித்திர அனுபவம் காட்டுகின்றது. 1963ல் ஓரளவு அணு ஆயுத சோதனைத்தடை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு இருபது வருடங்கள் சென்றுவிட்டன. இந்தக் காலப்பகுதியில் இரண்டு மேலாதிக்கவல்லரசுகளும் ஆயுதப் பரிகரணப் பேச்சு வார்த்தைகளை நடாத்தி சில ஒப்பந்தங்களும் செய்துவிட்டன. ஆனால் அதன் பெறுபேறுதான் என்ன? குறைப்புகளுக்கான சகல பேச்சுவார்த்தைகளின் மத்தியிலும் அவர்களது ஆயுதங்கள் குறிப்பாக அணு ஆயுதங்கள் எண்ணிக்கையில் அதிகரித்தோடு தரத்திலும் முன்னேற்றம் கண்டுள்ளன. அவர்களது வருடாந்த இராணுவச்செலவு உலகச்செலவின் அரைவாசிக்கு மேலானவை. இன்று உலகத்திலுள் அணுஆயுதங்களில் 95 சத வீதமானவை இந்த இரண்டு மேலாதிகக வல்லரசுகளுடையதாகும். இந்த மேலாதிக்க வல்லரசுகளின் ஆயுதப் போட்டாபோட்டி தரை, கடல், வானம் என்பவற்றைக்கடந்து அண்டவெளிக்கும் சென்றுள்ளது. ஆயுதப் பரிகரணப் பேச்சுவார்த்தைகளின் மத்தியில் இரண்டு மேலாதிக்க வல்லரசும் ஒன்றையொன்று ஆயுதப் போட்டியில் விஞ்சவே எத்தணிப்பதை நடைமுறை காட்டுகிறது. ஆயுதப் பரிகரணத்தில் அவற்றிற்கு உண்மையில் விருப்பம் உண்டா என்பது கேள்விக்குரியதே.

சீனா சமாதானத்தை விரும்புகிறது—ஆயுதப்பரிகரணத்திற்கு ஆதரவு தெரிவிக்கிறது. நாம் உண்மையான ஆயுதப் பரிகரணத்தையே விரும்புகிறோம்.

சீனா எப்போதும் அணு ஆயுதங்களுக்குப் பூரண தடைவிதிக்கவேண்டுமென்றும் இருக்கும் ஆயுதங்களை அழிக்க வேண்டுமென்றும் கூறிவருகிறது.

1964ல் சீனா தனது முதலாவத அணுகுண்டை வெற்றிகரமாகப் பரீட்சித்த சமயம் தான் தனது பாதுகாப்பிற்காக மட்டுமே அணு ஆயுதங்களை தயாரிக்கின்றது என்பதையும் எந்த ஒரு கட்டத்திலும் முதன் முதலில் அணு ஆயுதங்களைப் பாவிக்கும்

(7-ம் பக்கம் பார்க்க)

# அக்டோபர் 21 எழுச்சியின் நினைவுகள்

இக்கட்டுரை 1966-ம் ஆண்டு அக்டோபர் 21 எழுச்சியின் பதினேழாவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் முகமாக வெளியிடப்படுகின்றது.

[ஆ. குழு]

1966ம் ஆண்டு அக்டோபர் 21 எழுச்சியானது ஐந்துலட்சத்திற்கு மேற்பட்ட தாழ்த்தப்பட்ட தமிழ் மக்களின் வாழ்வில் ஒரு வரலாற்றுத் திருப்பு முனையை ஏற்படுத்திய எழுச்சியாகும்.

அன்றாட வாழ்வில் தாழ்த்தப்பட்ட மக்கள் சாதி, தீண்டாமையின் கொடுமைகளால் வாட்டி வதைக்கப்பட்டனர். பொது இடங்களில் இரண்டாம் தரப் பிரஜைகளாக நடத்தப்பட்டனர். தேனீர்க்கடைகள், உணவுச்சாலைகள், கோவில்கள், பாடசாலைகள், போன்ற இடங்களில் எல்லாம் ஒதுக்கப்பட்டு கேவலமான முறைகளில் நடத்தப்பட்டனர். நிலப்பிரபுத்துவ அம்சங்களான அடிமை குடிமை முறைகளால் நசுக்கப்பட்டனர்.

நிலமற்றவர்களும், தொழிலாளர்களும், விவசாயிகளும், அன்றாட கூலி உழைப்பாளர்களுமான தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைக் குரலானது சாதி அகம்பாவம் கொண்டோருக்கும், சொத்து சுகம் கண்டோருக்கும், அவர்களது அரசியல் பிரதிநிதிகளாக வீற்றிருந்த தமிழ்த் தலைவர்களுக்கும் செவிடன் காதில் ஊதிய சங்காகவே இருந்தது. அதேவேளை சாதி அகம்பாவம் கொண்டோர் சாதி வெறியர்களையும் குண்டர்களையும் கொண்டு உரிமைக்குரல் எழுப்பிய மக்களுக்கு எதிராக கொடுமைகளையே இழைத்து வந்தனர். கொலை, கொள்ளை வீடெரிப்பு போன்றவற்றால் தாழ்த்தப்பட்ட மக்கள் காலத்திற்குக் காலம் அட்டூழியங்களுக்கு ஆளாக்கப்பட்டு வந்தனர்.

தாழ்த்தப்பட்ட மக்களின் மனித உரிமைகளுக்கான கோரிக்கைகள் உதாசீனம் செய்யப்பட்டன. சமாதானமாக சாத்வீகமாகத் தீர்த்து வைக்கப்படும் என்ற ஏமாற்று வாக்குறுதிகளால் இழுத்தடிக்கப்பட்டன. சமாதான மாநாடுகள், சமரசப் பேச்சு வார்த்தைகள் ஒன்றன் பின் ஒன்றாகத் தோல்வி கண்டன.

இத்தகைய நிலையிலேயே தான் தாழ்த்தப்பட்ட மக்கள் தமது உரிமைகளை வென்றெடுப்பதற்கு தமது சொந்தப் போராட்டங்களைத் தமது சொந்தப் பலத்தில் தங்கி நின்று முன்னெடுக்க வேண்டும் என்ற அறைகூவலை அன்றைய இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி முன்வைத்தது. அந்த புரட்சிகரமான அறைகூவலை முன்னெடுத்த முதல் எழுச்சிதான் 1966ம் ஆண்டு அக்டோபர் 21 எழுச்சியாகும். சுன்னாகத்தில் இருந்து சாதி அமைப்புத் தகரட்டும் சமத்துவ நீதி ஓங்கட்டும் என்ற பேரிடி போன்ற முழக்கத்துடன் ஆரம்பித்த கம்யூனிஸ்ட் கட்சியின் எழுச்சிமிக்க புரட்சிகர ஊர்வலத்தை சாதிவெறியர்களினதும்—பிற்போக்கு அரசியல் வாதிகளினதும் ஆதரவோடு பொலிஸ் படை தடுத்துத் தாக்கி கலைக்க முயன்றது. ஆனால் அவர்களால் அது முடியவில்லை- ஊர்வலத்தில் தலைமை தாங்கிச் சென்ற தோழர்கள் தாக்கப்பட்டு இரத்தம் சிந்தப்பட்டு கைது செய்யப்பட்டபோதிலும் ஊர்வலம் யாழ்ப்பாண வரை தொடரவே செய்தது அன்றைய எழுச்சி தான் ஆண்டாண்டு காலம் அடக்கப்பட்டுவந்த தாழ்த்தப்பட்ட மக்களை விழித்தெளச் செய்து, அணிதிரளச் செய்தது. சரியான கொள்கை அடிப்படையில் சரியான வழிகாட்டலில் போரிடச் செய்தது. போராட்டங்கள் கடுமைகண்டன. இரத்தம் சிந்தப்பட்டது. உயிர்கள் தியாக விலையாகின. உரிமை கோரிய மக்கள் எத்தனை இழப்புகள் மத்தியிலும் சோர்ந்து விடவில்லை. தங்களை வலுப்படுத்திக் கொண்டு சாதிவெறியர்களையும், சாதி அகம்பாவம் கொண்டோரையும் தனிமைப்படுத்தி முற்போக்கு நல்லெண்ணம் கொண்ட உயர் சமூக மக்களின் ஆதரவோடு இறுதிவரை தமது போராட்டங்களை முன்னெடுத்தனர். அக்டோபர் 21 எழுச்சி ஆரம்பித்த முதல் ஐந்து ஆண்டுகளிலேயே தாழ்த்தப்பட்ட மக்களின் போராட்டங்களுக்கான வெற்றிகள் பெறப்பட்டன. தேனீர்க்கடைகள், கோவில்கள், பொது இடங்கள் என்பனவற்றில் சமத்துவமும், நீதியான உரிமைகளும்கிடைக்க வழிபிறந்தன.

தலைகுனிந்து, கைகட்டி, வாய்பொத்தி வாழ நிர்ப்பந்திக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் தமது போராட்டங்களினால் தலை நிமிர்ந்து யாருக்கும் அடிபணியா நிலைக்கு முன்னேறினர். அவர்களின் ஆண்டாண்டுகால அடிமைத்தனமான வாழ்வில் 1966 அக்டோபர் 21 எழுச்சி ஒரு வரலாற்றுத் திருப்பு முனையாகியது.

சமுதாயத்தில் அநீதிகளுக்கும், அடக்குமுறைகளுக்கும் சுரண்டலுக்கும், உள்ளான மக்கள் தமது நியாயமான உரிமைகளுக்கும் விடுதலைக்கும் தமது சொந்தப் பலத்தில் ஐக்கியப்பட்டு சரியான கொள்கை அடிப்படையில் போராட்டங்களை முன்னெடுத்தால் அப்போராட்டங்கள் ஒருபோதும் தோல்வி அடைய மாட்டா என்ற உண்மையை அன்றைய எழுச்சியும் அதைத் தொடர்ந்த போராட்ட அனுபவங்களும் மக்களுக்கு எடுத்துக்காட்டின அத்துடன் வர்க்க அடிப்படையில் வகுக்கப்பட்ட கொள்கையும் அதைவழி நடத்துவதற்கான மார்க்சிச லெனினிசத் தலைமையும் இருந்தால் மக்களது எந்தப் போராட்டமும் தோல்வி காணமாட்டாது என்பதை அன்றைய நிலைமைகள் நிரூபித்தன.

இன்று தாழ்த்தப்பட்ட மக்கள் தமது சமத்துவத்திற்கான உரிமைகளைப் பெற்ற போதிலும் நிலம், கல்வி, வேலை வாய்ப்பு போன்றவற்றால் பாதிக்கப்பட்டே வருகின்றனர். குறிப்பாக அவர்களது குடியிருப்பு நிலங்களும், விவசாய நிலங்களும் இன்று நிலவசதி, சொத்துவசதி படைத்தோரின் கைகளிலேயே உள்ளன. இதனால் மக்கள் புதிய புதிய வழிகளில் அடக்குதலுக்கும் புறக்கணிப்புகளுக்கும் ஆளாகி வருகின்றனர். இப்புதிய பிரச்சினைகளுக்கும் சரியான கொள்கை, சரியான ஸ்தாபன அமைப்பு சரியான வழிகாட்டலில் மக்கள் பல்வகைப் பட்ட இயக்கங்களையும், போராட்டங்களையும் முன்னெடுக்க வேண்டியே உள்ளது. அதேவேளை சாதி தீண்டாமையின் கேவலங்களும், அடிமை குடிமைமுறைகளின் நடைமுறைகளும் முற்றுமுழுதாக அகற்றப்படவில்லை என்பதையும் கண்டுகொள்வது அவசியம். இதற்கான கொள்கைகளையும், கோரிக்கைகளையும் முன்வைத்து உண்மையான மக்கள் இயக்கத்தை கட்டி எழுப்பி முன்னெடுக்க அக்டோபர் எழுச்சி நாளில் திடசங்கற்பம் கொள்ளுதல் அவசியம். ★

# இரு போராட்டத் தோழரிடையே

**கலை இலக்கிய அரங்கு**

## தோழர்கள் சௌ என்லாய் - டெங்யிங்சௌ வாழ்வில் நடந்த சில சம்பவங்கள்

**9. கிருப் அப்பிள் மலரும் பியோனி மலரும்.**

சௌ என்லாயின் வளவிலிருந்த கிருப் அப்பிள் மலர்கள் முழுமையாக மலர்ந்து கிளைகள் காற்றில் அசையும்போது நறுமணம் வீசும். இம்மலர்கள் 'கொத்துக் கொத்தாகவே' மலர்ந்திருந்தபடியால் சௌ என்லாய் பெரிதும் விரும்பினார். டெங்யின்சௌவும் ஒய்வு நேரங்களில் இவற்றை ரசிப்பார். ஆனல் அந்த ஆண்டோ இவற்றைக் கண்டு களிக்க சௌ என் லாய் சீனவிலில்லை.

1954ம் ஆண்டு முதுவேனிற் காலத்தில் சௌ என்லாய் ஒரு தூதுக்குழுவிற்குத் தலைமை தாங்கி ஜெனிவா சென்றார். இதுவே சீன பங்கு பற்றிய முதலாவது சர்வதேச மாநாடாகும். இச் சீனத் தூதுக் குழு பல் துறை நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தபடியால் மாநாட்டிற்கு முன்பும் பின்புமாகச் சுமார் நான்கு மாதங்களுக்கு மேல் ஜெனிவாவில் தங்க வேண்டி ஏற்பட்டு விட்டது. மாநாட்டின் முற்பகுதிகளில் யுத்தத்திற்குப் பிற்பட்ட கொரியாவின் நிலைமையை ஆராய்ந்தபோது அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் தாங்கள் தனித்துவிடப்பட்டதை உணர்ந்தார்கள். மாநாட்டின் பிற்பகுதிகளில் இந்தோ சீனவில் அமைதி நிலையை மீண்டும் ஏற்படுத்துவது தொடர்பாக இரு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன. ஜெனிவா மாநாட்டில் சீனவின் இராஜதந்திர வெற்றிக்குக் காரணம் தூதுக்குழுவிற்கு கட்சியின் மத்திய குழுவின் வழிகாட்டலும் உறுப்பினர்களின் சாதுர்யமுமேயாகும், சௌ என் லாயின் பங்களிப்பு அளவிடக்கரியது. அவருடைய ராஜதந்திரமும் கொள்கையிலிருந்த் பிடிமானமும் மாற்றார் கருத்திற்குச் செவிமடுக்கும் தன்மையுமே மாநாட்டின் வெற்றிக்கு உறுதுணையாயின ஓய்வில்லாமல் வேலைச் சுமைகள் நிரம்பிய நாட்களில் உறங்கியதும் உண்டதும் மிகக் குறைவே, உறக்கமின்மையால் கண்கள் சிவந்திருந்தபோதிலும் அயராது வேலை செய்தார்.

அழுத்தி உலர்த்தியகிருப் அப்பிள் மலரும் இலையும் கொண்ட கடித உறையொன்றை சீனவிலிருந்து வந்திருந்த தூதுவனொருவன் சௌ என்லாயிடம் கொடுத்தான். இவை அவர் வளவிலிருந்து டெங் யின் சௌவால் எடுக்கப்பட்டு அழுத்தப்பட்டவை இச்செயல் டெங் யின் சௌ தமது கணவர் மீது வைத்திருந்த பற்றையும் பாசத்தையும் எடுத்துக் காட்டுகிறது எட்டாத் தூரத்திலிருந்தவருக்கு வீட்டையும் நாட்டையும் நினைவூட்டுவதாயிருந்தது. அம்மலர்களிலிருந்து வீசிய நறுமணம் இதயத்தில் புத்துணர்வையூட்டியது.

மலர்ச் சோலைகள் நிரம்பிய ஜெனிவாவிலிருந்த சௌ என் லாயும் பியோனி மலரொன்றை அழுத்தியும் உலர்த்தியும் நாடு திரும்பிய தோழரொருவர் மூலம் டெங்யின் சௌவிற்கு அனுப்பிவைத்தார். அதனைப் பெற்ற டெங்யின் சௌ அதனூடாக சௌ என்லாயின் உள்ளத்தையும் புன்னகையையும் கண்டார். பீஜிங்கும்

தமிழில்:

**க. நடனசபாபதி**

ஜெனிவாவும் கிருப் அப்பிள் மலராலும பியோனி மலராலும் இணைந்தன. சௌ என்லாயும் டெங்யின் சௌவும் தமது ஒய்வுநேரங்களை இப்படிதான் பயன் படுத்தினர், ஒருவரை ஒருவர் உற்சாகப் படுத்தினர். டெங்யின் சௌ இம்மலர்களை இன்றும் பாதுகாத்து வருகிறார். அவை அவர்களின் அன்பின் சின்னங்களாக விளங்குகின்றன.

**உங்கள் போராட்டத் தோழரிடமிருந்து... துயருடன் - குட்டிசௌ**

ஜனவரி 1976 பெரும் தலைவரும் அன்புப் பிரதமருமான சௌஎன்லாயை இழந்து நாடும் மக்களும் ஆருத்துயரில் மூழ்கியிருந்தனர். டெங்யின்சௌவும நெருங்கிய சகாவையும், போராட்டத்தோழரையும் பறிகொடுத்து மீளாத்துயரில் மூழ்கியிருந்தார். தலைவரின் அஸ்தியைக் கொண்ட பேழைக்குப் பக்கத்தில் சாத்தப்பட்டிருந்த சிறிய வெள்ளை மலர் வளையத்தில்-உங்கள் போராட்டத்தோழரிடமிருந்து—துயருடன் குட்டி சௌ (சௌஎன்லாய் டெங்யின் சௌவைச் செல்வமாக 'குட்டிசௌ' என்பார்) என்ற வாசகத்தைக் கொண்ட தாள் செருகப்பட்டிருந்தது. வளையத்திலிருந்த வெள்ளை மலர்கள் எத்தனையோ நீண்டகால இன்பக் கதைகளை ஞாபகம் ஊட்டின.

ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக சௌஎன்லாயும் டெங்யின்சௌவும் புரட்சிப் பாதையில் கைகோர்த்து தோளோடு தோள் நின்றனர். ஏகாதிபத்தியத்தை, நிலப்பிரபுத்துவத்தை வன்மையாய் எதிர்த்தனர். கொமின்டாங் பயங்கர ஆட்சிக்கெதிராக ஒருவரை ஒருவர் சார்ந்தும் சேர்ந்தும் போராடினர். நீண்ட பயண நடப்பில் உடனிருந்தனர். பிற்போக்குவாதிகளைக் கண்டித்தனர் விடுதலைக்குப் பின் ஒருவரை ஒருவர் ஊக்குவித்தனர். மக்கள்சேவையில் முழுமனதுடன் ஈடுபட்டனர். பொய்யான குற்றச் சாட்டுகள் தொடுக்கப்படுகின்றபோது ஒருவரை ஒருவர் ஆறுதல் படுத்தினர். நெருக்கடி நிலைகள் ஏற்படும்போதெல்லாம்கணவன் மனைவி என்ற கட்டுக்கு அப்பால் சென்று பிரச்சனைகளைச் சந்தித்தனர். போராட்டத் தோழர்கள் என்பதற்கு இலக்கணமாகவே விளங்கினர். உங்கள் போராட்டத் தோழரிடமிருந்து-குட்டி சௌ' என்பது சௌஎன்லாயின் நினைவோடு என்றும் நிலைக்கும்.

சௌஎன் லாயும் டெங்யின்சௌவும் பொருள் முதல் வாதிகள். 1956 ஆண்டு கட்சியின் மத்திய குழு உறுப்பினர்களின் உடலை மரணத்திற்குப் பின் தகனம் செய்யவேண்டுமென்ற ஆலோசனையை முன் வைத்தபோது சௌஎன்லாய் தாமோ அல்லது தமது மனைவியோ யார் முதல் இறந்தாலும் மற்றவர் இறந்தவருடைய சாம்பலைப் பாதுகாக்கக் கூடாது எனக் கேட்டுக்கொள்ள வேண்டுமென்ற கருத்தை வற்புறுத்தினார். சௌஎன்லாய் நோய்வாய்ப்பட்டிருந்தபோதும் இக் கருத்தைப் பலமுறை எடுத்து கூறினார். உயிரோடு போராடிக் கொண்டிருந்தபோதும் இதனைக்கூறிவந்தார். இதிலிருந்து அவரை மாற்ற அவரோடு பணிபுரிந்தோர் எவ்வளவோ முயன்றனர்.

'உண்மையான பொருள் முதல் வாதிகள் வாழ்வையும் சாவையும் சரியானபடி நோக்கவேண்டும். மனிதர்கள் அநித்தியமானவர்கள். நான் முதலில் இறந்தால் எனது விருப்பத்தை எனது மனைவி நிறைவேற்றுவாளோ தெரியாது. ஆனல் அவள் இறந்தாலோ நான் நிறைவேற்றுவேன். எனது சாம்பலை எனது தாயகத்தின் நிலத்திலும், ஆற்றிலும் கடலிலும் தூவுங்கள். பொருட்கள் அழிவதில்லை. நாட்டுமக்களுக்குப் பயன்படும விதத்தில் எனது சாம்பலை உரமாக்குவீர்' என்று கூறினார் சௌஎன்லாய்.

சௌஎன்லாய் காலமானபோது டெங்யின்சௌ தமது கணவரின் விருப்பத்தைக் கட்சியின் மத்திய குழுவிற்குத் தெரிவித்தார். அதன் பிரகாரம் அவருக்கு நினைவாஞ்சலிகள் நடைபெறவில்லை. சீனவின் பெரும் புரட்சித்தலைவரின் சாம்பல் தாயகத்தின் மண்ணைத்தழுவியது.

சௌஎன்லாயின் மறைவிற்குப் பிறகு டெங்யின்சௌவிற்கு நாடெங்கிலிருந்தும் கணக்கற்ற அனுதாபக்கடிதங்கள் வந்தன. அவற்றில் குறிப்பிடத்தகுந்தது தியான் ஜின் உடைதயாரிக்கும் நிலையத்திலிருந்து வந்தது. அங்குள்ள தொழிலாளிகள் தாமே தைத்த பருத்திச் சட்டையொன்றை அனுப்பி வைத்தார்கள். சௌஎன்லாயும் டெங்யின்சௌ என்றுமே நன்கொடைகளை ஏற்றதில்லை இருந்தபோதிலும் இதனை மட்டும் டெங்யின்சௌ ஏற்றுக் கொண்டதற்குக்காரணம் அவர்கள சௌ என்லாய்மீது வைத்திருந்த பாசத்தின் அடையாளமாயிருந்ததே யாரும். அவர்களுக்கு நன்றி தெரிவிக்குமுகமாக ஒரு சிறு தொகை பணத்தை அத் தொழிற்சாலைக்கு அனுப்பிப் புத்தகங்கள் வாங்கப் பயன்படுத்தும் படி குறிப்பிட்டிருந்தார். சௌஎன்லாயின் போராட்டத் தோழர் என்ற காரணத்தால் அவருடைய மறைவிற்குப் பிறகு அவரிடம் செலுத்திய அன்பை டெங்யின்சௌ மீது செலுத்தினர்.

சௌஎன்லாய் உயிருடன் இருக்கும்போது டெங்யின் சௌவைப் பற்றி அடிக்கடி குறிப்பிடுவது இதுதான். 'குட்டி சௌ உற்சாகமான உள்ளமும் பொறுமையான குணமும் ஒருங்கே அமைந்தவள். இந்த இரு பண்புகளும் அவளிடம் அழகாகப் பின்னிப் பிணைந்துள்ளன. இது உண்மையிலேயே அற்புதம் தான்'

இந்தப் பொருத்தமான கணிப்பு நீண்ட காலமாக ஜீவ-மரணப் போராட்டங்களில் ஒன்று சேர்ந்து நின்ற ஒருவரால்தான் உணர முடியும்.

புரட்சித் தலைவர் ஒரு மனிதர்தான்- கடவுள்லல்லர். புரட்சியாளர்களிடையே அன்பு வளர்க்கப்படவேண்டும். இது மக்களுக்கான போராட்டமாக உருவாவதற்கு முன் உருவாதல் வேண்டும். சௌ என்லாய்க்கும் டெங்யின்சௌவிற்கும் இடையிலான அன்பு இவ்வளவு நீண்டகாலமாக மாசுபடாமல் இருந்ததேன்?

டெங்யின் சௌ ஒருமுறை ஒரு யப்பானிய நிருபருக்கு பேட்டியளித்தபோது 'நாம் வாழ்நாளெல்லாம் புரட்சி போராளிகளாகவேயிருந்தோம்' என்றார்.

தேசப் புரட்சிதான் அவர்களுடைய அன்பை ஆழமாக்கியது. அவர்களிடையே நிலவிய அன்பு இருபோராட்டத் தோழர்கள் இடையே ஏற்பட்ட அன்பு ஆகும்.

★ முற்றும் ★

## 52 பேருக்கு

சற்றே வழி விலகி
நந்தி வழி விட்டாற்போல்
வெலிக்கடையின் சிறைக்கூட
இரும்பு நெடுங்கதவு
தானே திறக்கும்
அங்கு.
காவலர்கள் அறியாமல்
கற்சுவர்கள் சூழ்ந்திருக்கும்
அறைக்குட் கொலை நடக்கும்.
பகுத்தறிவு ஆளுகிற
யுகமதனில் அற்புதங்கள்
ஒருக்கால் நிகழுமெனில்
ஒப்பார்கள் என்பதனல்
மறுகால் நிகழும்
கண்டு விறைத்த
சிறைச் சுவர்கள்
மௌனிக்கும்.

—சேகர்

நன்றி
'தாயகம்'

## ஹிட்லரின் நாட்குறிப்பு 1983

ஹிற்லர் டயறிகள்—
அண்மையில் வந்தவை போலிகள். உண்மை.
ஹிற்லர் மரித்ததும் உண்மை. ஆனல்
ஹிற்லர் டயறிகள்
இன்றும் தொடர்ந்தும் எழுதப் படுவன:
செயலாய், நிசமாய்.

இன்று இந்த இலங்கை மண்ணில்
ஹிற்லரின் சொற்கள் உயிர்த்துத் தங்கள்
நிழலுரு நீங்கி நிசங்களாவன.
அக்கினி தோய்த்து எழுதிய சொல்லாய்
எரியும் கடைகள், வீடுகள், மனிதர்.

வெட்டு வாள்களும் வெடித்துவக்குகளும்
வரிக்குவரி கீழ்ச் செங்கோடிடுவன.

இந்த மண்ணில்
தமிழர் வாழும் ஒவ்வோரு தெருவிலும்
வீடு, தோட்டம், பள்ளிக்கூடம்
பல்கலைக்கழகம், டணிமனை, கோவில்,
பெருஞ்சிறைக்கூடம்... ஒவ்வோரிடத்தும்
குருதியும் தசையும் நிணமும் எலும்பும்
தோலும் மயிரும் தாளாய் விரியும்.
வாளும் துவக்கும் திவட்டிகளும்
இனவெறி உந்தும் ஆயிரங் கைகள்
ஏந்த, அழுத்தி எழுதிச் செல்லும்.

திரையின் மறைவில் இருந்து இயக்கி
எரிகிற வீட்டில் விறகு பொறுக்கும்
அரசு முதலைக் கண்ணீர் உகுக்கும்.
அல்லது புண்ணில் முள்ளாற் செதுக்கும்.

—மாவலி

நன்றி: 'தாயகம்'

# தோ.தொழிலாளரின் எதிர்காலம்?

இந்திய வம்சாவழித் தமிழர்களான தோட்டத் தொழிலாளர்கள் இன்று போல் என்றுமே விரக்தியடைந்தது இல்லை. அந்தளவு நிலைக்கு கடந்த இனவாத வன்செயல்கள் அவர்களை தள்ளிவிட்டுள்ளது. அவர்கள் பிரிவினை கோரவில்லை. அதற்கு ஆதரவும் கொடுக்கவில்லை. அரசிற்கு பூரண ஆதரவு கொடுத்தனர். அவர்களின் தொழிற்சங்கத் தலைவர் திரு. தொண்டமான் அமைச்சராகவும் இருக்கிறார். இந்நாட்டின் ஏனைய தொழிலாளர்களுக்கு இருக்கும் பல உரிமைகள் அவர்களுக்கு இதுவரை கிடைக்கவில்லை. அவை எல்லாம் ஜே.ஆராலும் - யூ.என்.பி. யாலும் தமக்கு கிடைக்கும் என்ற நம்பிக்கையிலேயே ஜனாதிபதித் தேர்தலிலும், சர்வசன வாக்கெடுப்பிலும் இந்த ஆட்சியை ஆதரித்தனர். நன்றி கெட்ட ஆட்சி உரிமைகளைத் தான் வழங்கவில்லை. அவர்களது உயிர் உடைமைகளுக்காவது பாதுகாப்பு அளித்திருக்கக் கூடாதா? ஆட்சியின் அனுசரணை பெற்றவர்களே அந்த ஏழைத் தொழிலாளர்களை வதைக்கக் காரணமாக இருந்தார்களே என்பதை கண்ணாரக் கண்டதின் பின் அவர்களுக்கு விரக்தியும் வேதனையும் வராது இருக்கமுடியுமா? சொத்துடைய இந்தியவம்சாவழித் தமிழர் பலர் இந்தியாவிற்குச் சென்றுவிட்டனர். அவர்கள் அங்கு வாழக் கூடிய சகல சொத்து சுதந்திர வசதிகளை ஏற்கனவே உருவாக்கிக்கொண்டனர். ஆனால் அன்றாட உழைப்பாளர்களான தோட்டத் தொழிலாளர்களின் நிலையே இன்று பெரும் கேள்விக்குறியாக இருக்கிறது.

தோட்டத் தொழிலாளர்களின் மிகப் பெரிய தொழிற்சங்கமான இ.தொ.கா. வின் தலைவர் திரு தொண்டமான் தோட்டத் தொழிலாளர்கள் தொடர்ந்தும் இலங்கையில் சிங்கள மக்களுடன் சேர்ந்து வாழ முடியும் என்று கூறுகிறார். ஆனால் அந்த நிறுவனத்தின் பொதுச் செயலாளர் திரு எம். செல்லச்சாமி அப்படி வாழ்வது சாத்தியம் இல்லை. இந்திய வம்சாவழித் தமிழர் அனைவரும் இந்தியா சென்று விடுவதைத் தவிர வேறு வழியே இல்லை என்று அடித்துக் கூறுகிறார். இதே போன்று எல்லாத் தொழிற்சங்கங்கள் மத்தியிலும், ஏனைய மலையக பொது ஸ்தாபனங்கள் மத்தியிலும் இரண்டுவித அபிப்பிராயங்கள் இருக்கின்றன. யார் என்ன அபிப்பிராயங்களை முன்வைத்தாலும் இறுதி முடிவு தோட்டத் தொழிலாளர்களிடமே தங்கி உள்ளது.

தோட்டத் தொழிலாளர்கள் தமது முடிவை மேற்கொள்வதற்கு முன் நமது நாட்டினதும் இந்தியாவினதும் யதார்த்த நிலைமைகளை சற்று நிதானமாகப் பார்ப்பது அவசியம். முழு இந்தியத் தோட்டத் தொழிலாளர்களும் இந்தியா சென்று விடுவது என்று முடிவு செய்தாலும் கூட அதை இந்தியா ஒரு போதும் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. அகதிகளாகக் கூட ஏற்றுக்கொள்ள தயார் இல்லாத நிலையில் சொந்தப் பிரஜைகளாக ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். இதை இந்தியத் தலைவர்கள் ஏற்கனவே உறுதிப்படுத்தி விட்டனர்.

ஏற்கனவே ஒப்பந்தப்படி இந்தியா சென்ற தொழிலாளர்களின் வாழ்க்கை நிலை மிக மிகப் பரிதாபகரமானதே.

(8ம்பக்கம் பார்க்க)

---

## அந்நியத்......

3-ம் பக்கத் தொடர்

சுமைகளையும் மக்களின் கண்களில் இருந்து மறைப்பதற்கும், திசை திருப்புவதற்குமே பெருமுதலாளித்துவ பேரினவாத யூ. என். பி தமிழ் மக்களுக்கு எதிராக வன்செயல்களைப் புரிந்து தமது நோக்கங்களை ஈடேற்ற முயலுகிறது. யூ. என். பி கட்சியும்-அரசும் அந்நிய ஏகாதிபத்திய சக்திகளின் நலனுக்கே முன்னுரிமை வழங்குவதால் தேசிய பொருளாதாரம் எக்கேடு கெட்டாலும் அவர்களுக்கு அதுபற்றிக் கவலைகிடையாது. தேசிய பொருளாதாரத்தின் நலன்கள் பற்றி அக்கறைபடுத்தாத சக்திகளுக்கு தேசத்தில் எத்தனை 'இனக்கலவரம்' நடந்தாலும் கவலை ஏற்படப் போவதில்லை. அவற்றுக்கான காரணங்களை வேறு யாருடைய தலைகளின் மீதும் சுமத்தி விட்டு தமது ஏகாதிபத்திய எஜமானர்களிடம் மேலும் மேலும் மண்டியிட்டு பிச்சை வாங்கிக் கொள்ள அவர்களால் முடியும். தேசிய நெருக்கடியாக உருவெடுத்துள்ள தமிழர் பிரச்சினையை தீர்த்து வைப்பதில் இத்தகைய ஆட்சியாளர்களுக்கு எவ்வித சிரத்தையும் ஏற்படமாட்டாது. இந்த நாட்டின் சிறுபான்மை இனமக்களான தமிழ்மக்களிடம் அவர்களது பிரச்சினைகளை நியாயமான வழிகளில் தீர்த்து வைத்து நன் மதிப்பைப் பெறுவதிலும்பார்க்க நவகாலனித்துவ எஜமானர்களிடம் நன் மதிப்பைப் பெற்று அவர்களின் சொற்படி நடப்பதையே ஆட்சியினர் விரும்புகின்றனர்.

இன்று இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகள் நியாயமான முறையில் தீர்த்து வைக்கப்படுவதன் அவசியத்தை அரசாங்கத்தில் உள்ள பேரினவாத சக்திகளையும், அந்நியவல்லரசு ஆதிக்கத்தை வலுப்படுத்த விரும்பும் சக்திகளையும் தவிர்ந்த ஏனைய சகலரும் மனப்பூர்வமாக விரும்புகின்றனர். ஆனால் ஆட்சியினர் பக்கத்தில் இருந்து சாதகமான பதில்கள் எதுவும் இதுவரை வெளிவரவில்லை. அரசின் இத்தகைய போக்கு மிக விரைவாகவே விபரீத விளைவுகளுக்கு இட்டுச் சென்றுவிடுமோ என்ற அச்சத்தை தேசிய ஜனநாயக முற்போக்கு சக்திகளுக்கு ஏற்படுத்தியுள்ளது.

அவர்களது அச்சத்திற்கான சர்வதேச நிலைமைகளின் தன்மை அவதானிக்கக் கூடியதே. இரண்டு மேலாதிக்க வல்லரசுகளும் அவர்களது சகபாடிகளும் சேர்ந்து பல மூன்றாம் உலக நாடுகளில் நடந்து கொள்ளும் நடைமுறை தத்தமது நாடுகளின் சுதந்திரம், சுயாதிபத்தியம், இறைமை என்பனவற்றின் மீது அக்கறை கொண்ட சகலரையும் சிந்திக்க வைக்கிறது. நமது நாடு ஒரு லெபனானாக, சாட் நாடாக, அல்லது எல்சல்வேடராக மாறுவதை தேசபக்தியுள்ள எந்த இலங்கையனும் விரும்பமாட்டான். எமது பிரச்சினைகளை சமாதானமாகவோ அன்றி எமது சொந்தப் போராட்டங்களின் மூலமாகவோ தீர்த்துக் கொள்ளவேண்டுமே அன்றி அந்நிய சக்திகளை நாட்டுக்குள் நுழைய விடுவதன் மூலமாக அல்ல என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. அவ்வாறு அனுமதித்தால் அதனால் ஆதாயம் பெறுபவர்கள் அந்நிய வல்லரசுகளும் அவர்களது கூட்டாளிகளுமேயாவர் என்பதை உலக நாடுகள் பலவற்றின் வரலாறு நமக்கு கற்பிக்கின்றன.

ஆதலால் தமிழர் பிரச்சனைக்கு ஒரு நியாயமான தீர்வு அவசியம் என்பதை நாட்டு மக்களும், தேசிய ஜனநாயக முற்போக்கு சக்திகளும் அரசிற்கு ஒரு நிர்ப்பந்தமாக வற்புறுத்தலாக்க வேண்டும். இதில் குறிப்பாகப் பெரும்பான்மை மக்கள் மத்தியில் இருந்து உரமான குரல் ஆட்சியாளர்களை நோக்கித்திரும்ப வேண்டும். அவ்வாறான ஒரு நிர்ப்பந்தத்தின் மூலம் தமிழர் பிரச்சினையின் தீர்வு துரிதப் படுவதன்மூலமே நாடு எதிர்நோக்கியுள்ள அந்நியத் தலையீடு என்ற அச்சுறுத்தலில் இருந்து ஓரளவு தானும் விடுபடமுடியும். ★

---

## துரைமாரும் தொழிலாளர்களும்

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம், மக்கள் தோட்ட அபிவிருத்திச்சபை ஆகியவற்றின் தோட்டத்துரைமார்களுக்கும் உதவித் தோட்டத் துரைமார்களுக்கும் அரசு சம்பளஉயர்வு வழங்கியுள்ளது. தொழிலாளர்களிடம் கசக்கி வேலைவாங்கும் இத்தோட்டத் துரைமார்களுக்கு சம்பள உயர்வை அளித்துள்ள அரசு வேலை செய்யும் சாதாரண தொழிலாளர்களுக்கு ஏற்கனவே வழங்கிய சம்பள உயர்வுகளைக்கூட மறுத்துவருகிறது.

### தோட்டத் துரைமாருக்கு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தரம் | II | 2500 | ரூபாவில் இருந்து | 3500 | ரூபா |
| தரம் | III | 1800 | ரூபாவில் இருந்து | 2500 | ரூபா |
| தரம் | IV | 1400 | ரூபாவில் இருந்து | 1800 | ரூபா |

### உதவித் தோட்டத் துரைமாருக்கு

| | | | | |
|---|---|---|---|---|
| மணம் முடிக்காதோர் | 1000 | ரூபாவில் இருந்து | 1400 | ரூபா |
| மணம் முடித்தோர் | 1000 | ரூபாவில் இருந்து | 1600 | ரூபா |

---

## எங்கிருந்து............

4-ம் பக்கத் தொடர்

வாறு கூவுவது வெறும் உணர்ச்சி வேகமே தவிர விவேகமல்ல. நம் படை பலத்தின் பெரும்பகுதி. தொண்டர்களையும் எழுச்சிக்காரர்களையும் கொண்டது. நிரந்தரமான படைப் பிரிவுகள் ஒரு சிலவே நம்மிடம் உள்ளன; அவையும் திரட்டப்படவில்லை, ஒன்றோடொன்று இணைக்கப்படவில்லை. தாக்கும் படைகள் அமைப்பது கிடக்க, இந்தப் படைகள் பொதுவில் ராணுவ வரிசையில் அணிவகுப்பதற்கான பயிற்சியைக்கூடப் பெறவில்லை. இந்தச் சூழ்நிலைகளில் நம்முடைய போராட்டத்தின் பொது நிலைமைகளைக் கூர்ந்து நோக்கவல்ல எவரும், நிகழ்ச்சிகளின் வரலாற்று வளர்ச்சியில் உள்ள ஒவ்வொரு 'திருப்பத்திலும்' அந்தப் பொது நிலைமைகளைப் பற்றி விழிப்பாயிருக்கவல்ல எவருக்கும், தெளிவாயிருக்க வேண்டியது என்னவென்றால், இந்த நேரத்தில் நமது முழக்கம் 'தாக்குவதற்கு முற்படு' என்பதாகாது. மாறாக, 'பகைவனின் கோட்டையை முறையாக முற்றுகை இடு' என்பதாதல் வேண்டும். வேறு வகையில் சொன்னால், நம் கட்சியின் உடனடிக் கடமை, நமக்கு இப்போது உள்ள எல்லாச் சக்திகளையும் உடனே தாக்குதலுக்கு அழைப்பதல்ல, மாறாக, புரட்சிகரமான அமைப்புக்கு ஏற்பாடு செய்வதற்கு அழைப்பதாகும், அந்த அமைப்பிற்கும் எல்லாச் சக்திகளையும் ஒன்று சேர்க்கவும், இயக்கத்தைப் பெயரளவில் அன்றி, நடைமுறையில் நடத்தவும் ஆற்றல் இருக்கவேண்டும்; அதாவது அந்த அமைப்பு ஒவ்வொரு கண்டன நடவடிக்கையையும் திடீர் எழுச்சியையும் ஆதரிக்கவும், தீர்மானப் போருக்கு வேண்டிய ராணுவ பலத்தை அதிகப்படுத்திவலுப் படுத்துவதற்கு அவற்றைப் பயன்படுத்தவும் எந்த நேரத்திலும் சித்தமாயிருக்க வேண்டும்.

கோட்பாடு ரீதியில் இந்த முடிவை ஆட்சேபிக்கும் நபர்களைக் கண்டுபிடிப்பது மிகவும் கடினமாகும். ஏனென்றால் பிப்ரவரி-மார்ச்சு நிகழ்ச்சிகள் கற்பிக்கும் பாடம் மிகவும் தெளிவானது. ஆனால் இந்த நேரத்தில் நமக்கு வேண்டியிருப்பது பிரச்சினைக்குக் கோட்பாடு ரீதியில் முடிவு காண்பது அல்ல. அதற்கு நடைமுறைத் தீர்வு காண்பதேயாகும். எத்தகைய அமைப்பு தேவை, எவ்வகைப் பட்ட வேலைக்கு அது அவசியம்- இதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும் என்பது மட்டுமல்லாமல் அந்த அமைப்புக்குரிய சரிநுட்பமான திட்டத்தையும் வகுக்க வேண்டும். அப்போதே, அந்த அமைப்பைக் கட்டியமைக்கும் வேலையை எல்லாத் திசைகளிலிருந்தும் தொடங்க முடியும். இந்தப் பிரச்சினையின் அவசரத்தையும் முக்கியத்துவத்தையும் கருதி, நாம் ஒரு திட்டத்தின் சுருக்கத்தைத் தோழர்கள் முன் சமர்ப்பிக்கின்றோம். இதனை விவரமாக விளக்கும் ஒரு துண்டுப் பிரசுரம் தயாராகிக் கொண்டிருக்கிறது.

(மிகுதி அடுத்த இதழில்)

---

## உலக சமாதானம்

5-ம் பக்கத் தொடர்

நாடாகச் சீனா இருக்கமாட்டாது என்றும் திட்டவட்டமாக உலகிற்குப் பிரகடனம் செய்தது.

அணு ஆயுத அரசுகள் தத்தமக்கு எதிராக அணு ஆயுதங்களைப் பிரயோகிப்பதில்லை எனப் பொறுப்பெடுத்துக் கொள்ளல் வேண்டும் எனப் பிரேரித்த முதல்நாடு சீனாவே. அணு ஆயுதங்கள் அற்ற அரசுகளுக்கும்-அணு ஆயுதசூன்யப் பிரதேசங்களுக்கும் எதிராக அணு ஆயுதங்களை பிரயோகிக்கமாட்டாதென உறுதி அளித்தும் கொண்ட முதல் நாடும் சீனாவே.

அணுஆயுத சூனிய பிரதேசங்களையோ அல்லது சமாதானப் பிராந்தியங்களையோ ஏற்படுத்த வேண்டுமென்ற அணு ஆயுத மற்ற நாடுகளின் பிரேரணைகளை சீனா மதிக்கிறது. ஆதரவு வழங்குகிறது.

சீனா அணு ஆயுதங்கள் உட்பட்ட ஏனைய ஆயுதங்களையும் குறைக்கப்படுவதை ஆதரிக்கிறது.

இரசாயன ஆயுதங்களைப் பூரணமாகத் தடைசெய்து முற்று முழுதாக அழித்து விடவும் மகாநாடு விரைவான முடிவுகளைப் பெற வேண்டுமென சீனா விரும்புகிறது.

ஆயுதப் பரிகரணத்திற்கென ஐ. நா. பொதுச் சபையினால் கூட்டப்பட்ட இரண்டாவது விசேட கூட்டத் தொடரில் அணு ஆயுத அரசுகள் அணுஆயுதங்களை உற்பத்தி செய்வதை நிறுத்தவும், குறைக்கவும் இரண்டு மேலாதிக்க வல்லரசுகளை தமது அணு ஆயுதங்களை குறைப்பதிலும் ஓரிடத்திலிருந்து பிறிதோரிடத்திற்கு கொண்டு செல்லும் வசதிகளையும் பெரிய அளவில் குறைப்பதற்கும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென கேட்டுக் கொள்ளும் ஆலோசனையை சீனா முன்வைத்தது. ஆயுதப்பரிகரணத்தில் முன்னேற்றம் காண்பதற்காக நாம் மேலும் ஒரு முயற்சி எடுக்கின்றோம். சோவியத்யூனியனும் அமெரிக்காவும் அணு ஆயுதங்களை பரிசோதித்தலை, உற்பத்தி செய்தலை நிறுத்த ஆக்க பூர்வமான நடவடிக்கை எடுத்த பின், தங்களின் அணு ஆயுதங்களையும் குறைப்பதற்கும் சகலவிதமான அணு ஆயுதங்களை கொண்டு செல்லும் உபகரணங்களையும் அரைவாசியாகக் குறைப்பதற்கும் இணங்கும் பட்சத்தில் விரிவான பிரதிநிதித்துவமுடைய ஒரு சர்வதேச மகாநாடு கூட்டப்படல் வேண்டும் என்பதே எமது ஆலோசனையாகும்.

Registered as a Newspaper in Sri Lanka. செம்பதாகை செய்திப் பத்திரிகையாகப் பதிவுபெற்றது.

# யூலையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய பரிகாரம் வழங்க வேண்டும்!

கடந்த யூலையில் இடம்பெற்ற இனவாத வன்செயல்களால் தமிழ் மக்கள் உயிர், உடல். உடமை, இருப்பிடம், தொழில், கல்வி போன்றவற்றில் இழப்புக்களையும், துன்பங்களையும், வேதனையையும் பெற்றுக்கொண்டனர். அவற்றின் கொடிய தாக்கங்களில் இருந்து அவர்கள் இன்னும் மீளவில்லை. அரசாங்க ஊழியர்கள் தத்தமது தொழில்களுக்கும், தோட்டத்தொழிலாளர்கள் தமது பழைய தோட்டங்களுக்கும், மாணவர்கள் தமது பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளுக்கும் செல்ல முடியாத நிலையிலேயே உள்ளனர். அவர்களது தயக்கத்திற்கு அல்லது மறுப்பிற்கு நியாயமான காரணம் இருக்கின்றது. அவர்களின் பாதுகாப்பிற்கு இன்னும் உரிய உத்தரவாதம் ஏற்படவில்லை என்றே அவர்கள் நம்புகின்றனர். வெறும் வாய்மூல உத்தரவாதங்கள் நடைமுறையில அவர்களைப் பாதுகாக்க மாட்டாது. ஆதலால் தமிழர் பிரச்சினைக்கு ஒரு தீர்வு ஏற்படும் சூழ்நிலையில்தான் ஓரளவுக்கேனும் பதட்டத்தைத் தணித்து பாதுகாப்பைஉத்தரவாதப் படுத்திக்கொள்ள முடியும். இதை அரசாங்கம் உணர்ந்து விரைவில் ஒரு தீர்வுக்கான பாதையைக்காண வேண்டும்.

தற்போது வடக்கு கிழக்குக்கு வந்துள்ள அரசாங்க ஊழியர்களாலும், தனியார்-தோட்டத் தொழிலாளர்களாலும் பல அன்றாட முக்கிய வேலைகளும் தேவைகளும் தேங்கிக்கிடக்கின்றன. இது நாட்டின் பொருளாதாரத்தில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதும் ஆகும். அதேவேளை பாதிப்பட்டு இதுவரை திரும்பாத அரசாங்க ஊழியர் பலர் சம்பளம் பெற முடியாத நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளனர். அரசாங்கம் அவ்வாறு பழிவாங்கும் வேலையை உடன் நிறுத்தி பாதிப்படைந்தவர்களை மேலும் புண்படுத்தாது அவர்களது சம்பளத்தையும் ஏனைய நிவாரண உதவிகளையும் செய்யவேண்டும். அத்துடன் இடம் பெயர்ந்த ஊழியர்கள் தொழிலாளர்கள் மாணவர்கள் ஆகியோர் எவ்வித அச்சமும் இன்றி தமது பழைய இடங்களுக்குத் திரும்பக்கூடிய நிலையை காலம் தாழ்த்தாது அரசு உருவாக்கிக் கொடுக்க வேண்டும். இதில் பயமுறுத்தல், பழிவாங்கல், நிர்ப்பந்தம் என்ற வழிகளை விட்டு அவர்களது நியாயமான பிரச்சினைகளை மனட்சாட்சியின் அடிப்படையில் அணுகித் தீர்வுக்கு கொண்டு வருவதே சரியானதாகும்.

## தமிழர் கூட்டணித் தலைவர்கள்

1-ம் பக்கத் தொடர்

முயற்சிகள், இந்தியாவில் சொத்துக்கள் வாங்கி விட எத்தனிப்புகள் போன்ற வற்றிலேயே தற்போது இந்த தலைவர்கள் ஈடுபட்டிருக்கின்றனர் இவர்களின் தமிழ் நாட்டு அரசியல் கூட்டாளிகள் இவர்களை வைத்து ஆட்காட்டி தத்தமது அரசியல் வளர்ச்சிக்கு வேலை செய்கிருர்கள். அது மட்டுமல்ல முதலாளிகள் வியாபாரிகள் கூடக் கூட்டணித் தலைவர்களைப் பயன்படுத்தி வருகிருர்கள். அண்மையில் தமிழ் நாட்டில் ஒரு புடவைக்கடையை (அலமேலு ஹந்தாஸ்-திருச்சி,) கூட்டணித்தலைவர் ஒருவர் திறந்து வைத்ததாகவும் சில கூட்டணி எம். பீக்கள் அதில் பிரதம விருந்தினர்களாகவும் கலந்து கொண்ட செய்திகளை பத்திரிகைகளில் படிக்கமுடிந்தது.

தமிழர் கூட்டணித் தலைவர்களின் வெளிநாட்டு வாழ்வைப்பற்றித் தமிழ் மக்களிடம் சில அபிப்பிராயங்களைக் கேட்க முடிகின்றது. அதாவது பார்த்தசாரதியின் தூது வெற்றிபெற்ருல் அதன் மூலம் கிடைக்கும் ஆதாயங்களைப் பெற பறந்தோடிவருவார்கள அல்லது "இந்தியப்படை வந்தால்" அதன்மூலம் கிடைக்கவுள்ள அதிகாரத்தைப் பொறுப்பேற்க நிச்சயம் கூட்டணித் தலைவர்கள் இங்கே வருவார்கள். அதற்கு முன் இங்கு வந்து அவர்கள் தமிழ் மக்களுடன் சேர்ந்து கஷ்டங்களை அனுபவிக்கத் தயாராக இல்லை. அதுவரை தமிழ்மக்கள் எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை என்ற நிலையிலேயே கூட்டணித் தலைவர்கள் வெளிநாடுகளில் சுகமாக வாசம் செய்கின்றனர்.

இலங்கையில் தமிழர் பிரச்சினை இன்றைய நிலைக்கு மோசமடைவதற்கு பேரினவாதக்கட்சிகளும், முதலாளித்துவ பாராளுமன்ற அமைப்பு முறையும் மூலகாரணமாகக் கொள்ளும் அதேவேளை தமிழர் மததியில் இருந்து சென்ற தமிழ்த்தலைவர்களின் தவருன அரசியல்நிலைப்பாடும் பிரதான அம்சங்களில் ஒன்ருக எடுத்துக் கொள்வது அவசியப் என்பதே எமது தர்க்கமாகும் அவர்கள் இன்றுவரை தாம் இழைத்த அரசியல் தவறுகளை மறுபரிசிலனை செய்யத் தயாராக இல்லை. மேலும் மேலும் தவறுகளுக்குச் செல்வதையே தொழிலாகவும் கொண்டுள்ளனர். இன்று ஒரு இக்கட்டான நிலையில் தமிழ்மக்கள் இருக்கின்ருர்கள். இதற்கு இந்தியாவும்— பார்த்தசாரதியும் ஏதோ செய்வார்கள் என்று கூட்டணித்தலைவர்கள் நம்பிக்கொண்டிருக்கிருர்களே தவிர தமது சொந்த முயற்சிகளைத் தமது சொந்த நாட்டில் எடுக்கமுடியாத அரசியல் சூனியத்தின் காரணமாகவும், அவர்களது சொத்துடைய வர்க்க குணம்சத்தின் காரணமாகவும் தான் கூட்டணித் தலைவர்கள் வெளி நாடுகளில் சுக சீவியம் நடத்தி வருகிருர்கள். இவர்களைத் தமிழ்மக்கள் நம்பமுடியுமா? ஒரு கட்சி ஒரு தலைவன், அல்லது ஒரு தனிமனிதன் யாராகிலும் அவர்களின் சொற்களில் இருந்து அல்ல செயலில் என்ன செய்கிருர்கள் என்பதில் இருந்தே அவர்களை எடை போட்டுக் கொள்ளல் வேண்டும். இது ஒரு மாக்சிச அளவு கோல். இந்த அளவு கோலை மக்கள் பயன் படுத்தினுல் எந்த முகமூடி அரசியல் வாதிகளையும் மக்கள் இனம் கண்டு கொள்ளமுடியும்.

## வரவு செலவுத்...

1ம் பக்கத் தொடர்

கலவரத்தையும் சுட்டிக்காட்டினுர். சகல பொருளாதாரச் சுமைகளுக்கும் யூலை கலவரம் ஒரு கவசமாக ஆட்சியால் பயன் பயன்படுத்தப்படும் என்பது முன்னமே தெரிந்த ஒன்றே. கலவரத்தை ஏவி விடுவது போல் பொருளாதாரச் சுமையை ஒரு இனத்திற்கு எதிராக மட்டும் சுமத்த முடியாது. அதை முழு மக்களுக்கும் எதிராகவே சுமத்துவார்கள். அப்பொழுதாவது இந்த அரசு இன நலன்களுக்கும் அப்பால் வர்க்க நலனின் கொண்டுள்ள பந்தபாசத்தை பெரும்பான்மையான மக்கள் உணர்ந்து கொள்ள முடியும். இது சராம்சத்தில் சகலவித இனவாதத்திற்குப் பின்னுலும் சொத்துடைய ஆளும் வர்க்கப் பொருளாதார நலன்கள் மறைந்திருக்கும் என்ற உண்மையை மககளுக்குப் புலப்படுத்தும். நிதிஅமைச்சர் என்னதான் யோசனைகளைத் தெரிவித்தாலும் தனது பற்ருக்குறையை நிரப்ப நமதுநாட்டு மக்களின் மீதே கடும் சுமைகளைச் சுமத்துவார். இதைவிட அவருக்கு வேறு மாயாஜால வழி எதுவும் இல்லை.

## காணியும் சாதியும்

கொழும்பில் நீண்ட காலம் வியாபாரத்தில் ஈடுபட்ட பெரும் தமிழ்த் தனவந்தர் ஒருவர் அண்மைச் சம்பவங்களால் பாதிக்கப்பட்டு யாழ்ப்பாணத்தில் நிரந்தரமாக வசிக்க முடிவு செய்தார். அதற்காக காணிவாங்கி வீடுகட்டுவதற்கான முயற்சியிலும் இறங்கினுர். காணி யாழ்-நகரத்திலிருந்து ஐந்து மைல்களுக்குள் இருப்பதுடன் முக்கியமாக "மற்றப் பகுதியினர்" இல்லாத இடமாகவும் இருக்க வேண்டும என்று காணித்தரகரிடம் வற்புறுத்தினுர். மற்றப் பகுதியினர் என அந்தத் தனவந்தரால் அடையாளம் காட்டப்பட்டவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களேயாவர். தெற்கே இன வெறிக்காடையர்களுக்கு எல்லாத் தமிழர்களும் ஒரே விதமாகத் தெரிந்தது போல் இந்தத் தமிழ்த் தனவந்தருக்கு இத்தனை அனர்த்தனங்களுக்குப்பின்பும் எல்லாத் தமிழர்களையும் ஒரே தமிழர்களாகக் கண்டு கொள்ள முடியாமல் இருக்கிறது. இந்த இழி நிலை தமிழ்ச் சமுதாயத்தில் இருக்கும் வரை தமிழர் உரிமை பெறுதல், விடுதலை அடைதல் என்பனவை எவ்வளவிற்கு சாத்தியமோ நாமறியோம. இதில் வேடிக்கை என்னவெனில் இந்த விடயத்தை எமக்குக் கூறியவர் அந்தக் காணித் தரகராவர் அவரும் ஒரு தாழ்த்தப்பட்ட தமிழ் மகனுவார்.

## தோட்டத் தொழிலாளர்களின் எதிர்காலம்

7.ம் பக்கத் தொடர்

இந்தியா தாய்நாடு என்றும் தமிழ்நாட்டில் தமிழனின் ஆட்சி என்றும் கூறி, அங்கு சென்ருல் அங்கு நடக்கும் கேவலங்கள் வாய்ச்சொல்லால் வர்ணிக்க முடியாது. அங்கேயும் நிலவுடமை, சொத்துடமை, சாதிவேறுபாடு, அதிகாரம், பணம் யாவுமே நம்மக்களுக்கு எதிராக எண்ணற்ற இன்னல்களை விளைவிக்கின்றன. இவற்றின் உண்மை நிலை பற்றி ஏற்கனவே இந்தியாவிற்குச் சென்ற பலரின் கண்ணீர்க் கடிதங்கள் கதைகள் பலவற்றைச் சொல்கின்றன.

இந்தியாவிற்கு ஒப்பந்தத்தின்படி செல்லவேண்டியவர்கள் அங்கு செல்வதற்கு முடிவு செய்வதை யாரும தடுக்க முடியாது. ஆனுல் இலங்கையில் வாழ்வது என்ற முடிவோடு இலங்கைப் பிரசாவுரிமை பெற்றவர்களும், பெறுவதற்கு வாய்ப்பு உள்ளவர்களும இந்தியா சென்றுவிட வேண்டும் என்ற முடிவுக்கு வருவது சரியான ஒரு முடிவாக இருக்க முடியாது,

இனவாத வன்செயல்களின் பாதகமான பக்கம் ஒருபுறம் இருக்கிறது. அதே வேளை சகல சிங்கள மக்களும் இனவாதிகள் வகுப்புவாதிகள் என்று கொள்ளமுடியுமா? எவ்வளவோ இன்னல்கள் மத்தியிலும் தமிழர்களுக்கு பாதுகாப்புக் கொடுத்த சிங்கள மக்களே பெரும் பான்மையினர். பொலிஸ் படையில் இனவாதமற்ற தமது கடமை என்னும் அடிப்படையில் மனசாட்சிப்படி நடந்து சிங்களக் காடையர்களின் வெறியாட்டத்தை அனுமதிக்காத பல அதிகாரிகளையும், பொலிசாரையும் மலையகத்தின் பல இடங்களில் காணமுடிந்ததை இல்லை என்று மறுக்க முடியாது.

இனவாதம் எங்கிருந்து யாரால் கிளப்பப்படுகிறது என்பவற்றை அரசியல் ரீதியில் தோட்டத் தொழிலாளர்கள் கண்டு கொள்வது அவசியம். ஒரு உண்மையான தேசிய ஜனநாயக முற்போக்கு சக்திகள் ஆட்சி பீடத்திற்கு வருவதன் மூலம் ஓரளவு தூரத்துற்கு இனவாதத்தை தணிக்கமுடியும். அதற்கான சந்தர்ப்பம் வந்தபோது தொழிலாளர்கள் ஏமாற்றப் பட்டு விட்டார்கள். உண்மையாகவே நமது நாட்டில் இருந்து இனவாதம் இல்லாமல் போகக்கூடிய ஒரு நிலை வரும் என்பதில் நாம் மிக நம்பிக்கை உடையவர்களாகவே உள்ளோம். அதாவது தொழிலாளி வர்க்கத்தின் தலைமையிலான ஒரு புதிய ஜனநாயகப் புரட்சிமூலம் உருவாகும் மக்கள் ஜனநாயக அரசு அதிகாரத்தின் கீழ் இனவாதத்தை ஒழிக்க முடியும். அத்தகைய நிலையை நோக்கிய போராட்டத்திற்கு இலங்கை மக்களின் ஐக்கியம் வலுப்படுவதைத் தடுப்பதே இன்றைய பெரு முதலாளித்துவத்தினதும் பேரினவாத சக்திகளினதும் திட்டமிட்ட நடவடிக்கைகளாகும்.

எனவே நோயிலிருந்து நோயாளி விடுபடுவதற்கு உரியவழி இடம் மாறுவது அல்ல அல்லது உயிரையே தற்கொலை செய்து கொள்வதல்ல. நோய்க்குரிய வைத்தியத்தைச் செய்து உரிய மருந்தைச் சாப்பிடுவதேயாகும். இந்தியா வம்சாவழித் தமிழ் மக்களான தோட்டத் தொழிலாளர்கள் குறிப்பாக இலங்கையில் வாழ வேண்டியவர்கள் இந்தியா செல்ல முடிவு செய்வது பிரச்சினைக்கு ஒரு பரிகாரமாகாது. பிரச்சினையின் தீர்வை இங்கேயே ஏற்படுத்த சகல முயற்சிகளையும் குறுகியகால நீண்டகால அடிப்படையில் மேற்கொள்வதே சரியானதாகும்.

1-ம் பக்கத் தொடர்

திகளும், அந்நிய வல்லரசுகளின் ஆதிக்கத்தை நிலைநிறுத்தி வலுப்படுத்த விரும்புவோரும் செயலாற்றி வருகின்றனர். இத்தகைய தீய சக்திகளின் நலன் களுக்காகவோ அன்றி தேவைகளுக்காகவோ தேசியப் பிரச்சினையாகிவிட்ட தமிழர் பிரச்சினையை நீதியான முறையில் தீர்த்து வைக்கும் வழிவகைகளைப் பலியிட்டுக் கொள்ளவேண்டாம் எனவும் எமதுகட்சி கோருகிறது.

இன்றைய அரசாங்கம் பதவிக்கு வந்தபின் அதன் நேரடிப் பார்வையின் கீழ் நான்கு தடவைகள் திட்டமிட்ட இனவாத வன்செயல்களால் தமிழ் மக்கள் இம்சிக்கப்பட்டுள்ளனர். இவற்றின் தாக்கங்களினுல் தமிழ் மக்களில் ஒரு பகுதியினர் பிரிவினைக் கோரிக்கையின் பக்கம் செவிசாய்க்கும் சூழ்நிலைக்கும் தள்ளப்பட்டனர். இன்றைய நிலையிலும் கூடத் தங்களது பிரச்சினைகளுக்கு ஒரு நியாயமான தீர்வு ஏற்படுவதையே தமிழ்மக்கள் மனதார விரும்புகின்றனர். ஆனுல் அரசாங்கம் தனது பிடிவாதத்தாலும் வேறுபல உள் நோக்கங்களாலும் தமிழர் பிரச்சனையைத் தீர்த்து வைக்கும் முயற்சிகளில் கடினமான தயக்கத்தைக் காட்டி வருகின்றது. அரசின் தயக்கப் போக்கும், தட்டிக்கழித்துவிட முயலும் தன்மையும் நாட்டின் சுதந்திரம், சுயாதிபத்தியம், இறமை என்பனவற்றுக்கு அபாயத்தை விளைவிக்கும் அந்நிய வல்லரசுகளின் தலையீட்டுக்கே வழி வகுத்து விடும். ஆதலால் இவ் அபாயத்தை உணர்ந்து கொள்ளும் சகல தேசிய, ஜனநாயக, முற்போக்கு சக்திகளும்-மக்களும் முன்நிபந்தனை அற்ற ரீதியில் தமிழர் கூட்டணி உட்பட சர்வகட்சிகளின் மாநாட்டைக் கூட்டி தமிழர் பிரச்சனைக்குத் தீர்வுகாணும் கோரிக்கையை வற்புறுத்தும் இயக்கத்தை முன்னெடுக்க முன்வரல் வேண்டும். இது இன்றைய அவசியமான ஒரு தேசியத் தேவையாகும். அதே வேளை இதுவரை தடை நீக்கப்படாது இருக்கும் இரண்டு கட்சிகளுக்கும் உடன் தடைநீக்கம் செய்யவேண்டும் என எமது கட்சி வற்புறுத்துகின்றது.

அச்சுப்பதிப்பு யாழ்ப்பாண அச்சகம் 407, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம். வெளியீடு: சி. நவரத்தினம் 15/1 மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம்.